தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### பாபநாசம் அணை "சதம்'!



திருநெல்வேலி மாவட்டத்தின் பிரதான அணையான பாபநாசம் அணையின் நீர்மட்டம், வியாழக்கிழமை காலையில் 100 அடியைத் தாண்டியது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

இம் மாவட்டத்தில் பெய்துவரும் வடகிழக்குப் பருவமழைப்யால் அனைத்து அணைகளும் வேகமாக நிரம்பி வருகின்றன. விவசாயிகள் பிசான பருவ வேளாண் பணிகளைத் தொடங்கியுள்ளனர்.

விக்கிரமசிங்கபுரம் உள்ளிட்ட வடக்கு, தெற்கு கோடைமேலழகியான் கால்வாய்ப் பகுதி வயல்களில் நாற்று நடவுப் பணிகள் முடிந்துவிட்டன.

அணைகளின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பெய்த மழை காரணமாக, சேர்வலாறு அணை ஏற்கெனவே 100 அடியைத் தாண்டிவிட்டது. மாவட்டத்தில் பிரதான

அணையாகக் கருதப்படும் பாபநாசம் அணையின் நீர்மட்டம் 100 அடியை எப்போது தொடும் என்ற எதிர்பார்ப்பு விவசாயிகளிடையே காணப்பட்டது.

144 அடி கொள்ளளவு கொண்ட இந்த அணையின் நீர்மட்டம் புதன்கிழமை 98.50 அடியாக இருந்தது. இந்நிலையில், வியாழக்கிழமை காலை 1.50 அடி உயர்ந்து அணை நீர்மட்டம் 100 அடியை எட்டியது. மாலை நிலவரப்படி அணை நீர்மட்டம் 100.30 அடி. விநாடிக்கு 1,168.45 கனஅடி நீர்வரத்து இருந்தது.

வியாழக்கிழமை காலை 8 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் பாபநாசம் அணையில் 4 மி.மீ., சேர்வலாறு அணையில் 3 மி.மீ., மணிமுத்தாறு அணையில் 5.2 மி.மீ., ராமநதி அணையில் 1 மி.மீ. மழை பதிவாகியிருந்தது.

மணிமுத்தாறு அணை நீர்மட்டம் 73.30 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 366 கனஅடி தண்ணீர் வந்துகொண்டிருந்தது.

பிற அணைகளின் நீர்மட்டம்: கடனாநதி-71.80 அடி, ராமநதி-63.25 அடி, வடக்குப் பச்சையாறு அணை-11 அடி, கொடுமுடியாறு அணை - 25 அடி, அடவிநயினார் அணை - 114 அடி, கருப்பாநதி அணை - 61.68 அடி.

**மீனவர்களுக்கு தானே புயல் நிவாரணம்**

புதுவை மாநிலம், உப்பளம் தொகுதியில் தானே புயலால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு நிவாரண நிதியுதவி வியாழக்கிழமை வழங்கப்பட்டது.

மோட்டார் படகு பழுதடைந்ததற்கான நிவாரணத் தொகை தலா ரூ.ஒரு லட்சம் வீதம் 10 மீனவர்களுக்கும், கட்டுமர படகு பழுதடைந்ததற்கான நிவாரணத் தொகை தலா ரூ.33 ஆயிரம் வீதம் 16 பேருக்கும் வழங்க மீன்வளத்துறை உத்தரவிட்டுள்ளது.

இதற்கான நிதியுதவியை உப்பளம் தொகுதி எம்எல்ஏ ஆ.அன்பழகன் பயனாளிகளுக்கு வழங்கினார். உதவி ஆய்வாளர் ஐயனாரப்பன், மீனவர் அணிச் செயலர் ஞானவேல், நிர்வாகிகள் சக்திவேல், செல்வம், அருள், கல்ராஜா ஆகியோர் உடனிருந்தனர்.

**பால் உற்பத்தியை அதிகரிக்க வலியுறுத்தல்**

புதுச்சேரியில் பால் உற்பத்தியை அதிகரிக்க மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று புதுச்சேரி மாநில பால் உற்பத்தியாளர்கள் கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து அந்தக் கூட்டமைப்பின் தலைவர் ஏம்பலம் ஆர்.செல்வம் வியாழக்கிழமை வெளியிட்ட அறிக்கை:

தமிழகத்தில் கோமாரி நோய் பாதிப்பு அதிகமாக உள்ளது. இதனால் கால்நடைகள் தொடர்ந்து இறந்து வருகின்றன. தமிழக எல்லையை ஒட்டிய புதுவை மாநில கிராமங்களிலும் நோயின் தாக்கம் தென்படுகிறது. மாநில அரசு இதுகுறித்து உடனே நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நோயின் வீரியத்தைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். கால்நடை பராமரிப்புத் துறை, ராஜீவ்காந்தி கால்நடை மருத்துவக் கல்லூரி இணைந்து அனைத்து கிராமங்களிலும் சிறப்பு கால்நடை மருத்துவ முகாம்களை அமைத்து தடுப்பூசி போட வேண்டும்.

தற்போது பான்லே நிறுவனத்துக்கான பால்வரத்து மிகவும் குறைந்து விட்டது. புதுவை மாநிலத்திலேயே குறைந்த விலையில் பாலை கொள்முதல் செய்யாமல் பான்லே நிறுவனம் வெளிமாநிலங்களில் இருந்து லிட்டர் ஒன்றுக்கு ரூ.25 கொடுத்து பாலை கொள்முதல் செய்கிறது. ஏற்கெனவே, நஷ்டத்தில் உள்ள பான்லே நிறுவனம் மாதம் ரூ.50 லட்சம் வரை கூடுதலாக செலவிடுகிறது.

உள்ளூரில் லிட்டர் ஒன்றுக்கு ரூ.19 மட்டுமே அளிக்கப்படுகிறது. தீவன விலை, பராமரிப்பு செலவு அதிகரிப்பால் பால் உற்பத்தியாளர்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், புதுவை அரசு பால் கொள்முதல் விலையை உயர்த்தி வழங்க வேண்டும்.உள்ளூர் உற்பத்தியாளர்களிடம் பான்லே நிறுவனம் காட்டிய பாரபட்சத்தால் நாள் ஒன்றுக்கு ரூ.1 லட்சம் லிட்டராக இருந்த பால் உற்பத்தி தற்போது 25 ஆயிரம் லிட்டராக குறைந்து விட்டது. எனவே, அரசு உள்ளூர் பால் உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அதில் கேட்டுக்கொண்டுள்ளார்

**காய்கறி சாகுபடியில் ஆர்வம் காட்டும் செஞ்சி விவசாயிகள்**

குறுகிய கால காய்கறி சாகுபடி செய்வதோடு, அவற்றை பொதுமக்களிடம் நேரடியாக விற்பனை செய்வதிலும் செஞ்சி விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டுகின்றனர்.

செஞ்சி சங்கராபரணி ஆற்றங்கரை, பெரியகரம் பகுதிகளில் விவசாயிகள் சிறுகீரை, அரைக் கீரை, புளிச்ச கீரை, கத்தரி, வெண்டை ஆகியவற்றை அதிக அளவில் உற்பத்தி செய்து, அவற்றை நேரடியாக விற்பனை செய்து லாபம் ஈட்டுகின்றனர்.

இதுபோன்ற காய்கறிகளுக்கும், கீரை வகைகளுக்கும் பொதுமக்களிடையே நல்ல வரவேற்பு உள்ளது. மேலும், சாலையோரத்தில் உள்ள விவசாயிகள் தங்களது தோட்டத்தில் விளையும் காய்கறிகளை சாலையோரத்திலேயே விற்று பயனடைகின்றனர்.

மழை ஏமாற்றிவிட்டதால் நெல், கரும்பு உள்ளிட்ட பயிர்களுக்கு பாசனம் செய்ய போதிய அளவு தண்ணீர் இல்லாததால், இதுபோன்ற தோட்டப் பயிர் சாகுபடியில் ஈடுபட்டு வருவதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

**விலைவாசி உயர்வைகட்டுப்படுத்தக் கோரி டிச. 12-ல் ஆர்ப்பாட்டம்**

விலைவாசி உயர்வை கட்டுப்படுத்த வலியுறுத்தி, டிச. 12-ம் தேதி ஆர்ப்பாட்டம் நடத்த அனைத்து தொழிற்சங்கங்கள் சார்பில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

கரூர் சுங்ககேட்டில் புதன்கிழமை நடைபெற்ற கூட்டத்துக்கு ஏஐடியுசி மாவட்டச் செயலர் வடிவேலன் தலைமை வகித்தார்.

எல்பிஎப் மாவட்டத் தலைவர் கண்ணதாசன், சிஐடியு மாவட்டச் செயலர் ஜீவானந்தம், பிஎம்எஸ் மாவட்டச் செயலர் சௌந்தரராஜன், ஐஎன்டியுசி மாவட்டச் செயலர் ரத்தினம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

கூட்டத்தில், விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த வேண்டும், புதிய பென்ஷன் திட்டத்தை நீக்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, அனைத்து தொழிற்சங்கங்கள் சார்பில் வருகிற 12-ம் தேதி தில்லி நாடாளுமன்றம்

நோக்கி நடைபெறும் பேரணியில், கரூரிலிருந்து 500 பேர் பங்கேற்பது, அன்றைய தினம் கரூர் பேருந்து நிலையம் அருகில் உள்ள அஞ்சல் நிலையம் முன் ஆர்ப்பாட்டம் நடத்துவது என முடிவு செய்யப்பட்டது.

**சொட்டுநீர்ப் பாசனக் கருவிக்கான மானியம் பெற விண்ணப்பிக்கலாம்**

சொட்டுநீர்ப் பாசனக் கருவிகள் அமைப்பதற்கான மானியம் பெற தகுதியுடைய விவசாயிகள் விண்ணப்பிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.இதுகுறித்து புதுச்சத்திரம் தோட்டக்கலை உதவி இயக்குநர் புவனேஸ்வரி வெளியிட்ட செய்திக் குறிப்பு: புதுச்சத்திரம் வட்டாரத்தில் பெய்துவரும் மழையால் கிணற்றிலுள்ள நீரைக் கொண்டு அனைத்துப் பயிர்களுக்கும் நுண்ணீர் பாசனம் செய்திட தேவையான கருவிகளை மானியத்தில் அமைத்துக் கொள்ளலாம். சிறு, குறு விவசாயிகளுக்கு அனைத்துப் பயிர்களுக்கும் 100 சதம் மானியத்தில் நுண்ணீர் பாசன கருவிகள் அமைக்க 78 ஹெக்டேர் தொடர் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஒரு விவசாயிக்கு அதிகபட்சம் 2 ஹெக்டேர் வரை சொட்டுநீர்ப் பாசனத் திட்டத்தில் பயன் பெறலாம். மற்ற விவசாயிகளுக்கு 75 சத மானியத்தில் நுண்ணீர் பாசனக் கருவிகள் அமைக்க 596 ஹெக்டேர் இலக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் ஒரு விவசாயிக்கு அதிகபட்சம் 5 ஹெக்டேர் வரை சொட்டுநீர்ப் பாசன கருவிகள் அமைத்துப் பயன் பெறலாம்.எனவே, அனைத்துப் பயிர்களுக்கும் சொட்டுநீர்ப் பாசனக் கருவிகள் அமைக்க விருப்பமுள்ள விவசாயிகள், புதுச்சத்திரம் வட்டாரத் தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ஷேர் ஆட்டோ மோதல்:தாய், மகன் உள்பட 5 பேர் காயம்**

குமாரபாளையத்தில் வேகமாகச் சென்ற ஷேர் ஆட்டோ அடுத்தடுத்து மோதியதில் தாய், மகன் உள்பட 5 பேர் பலத்த காயமடைந்தனர்.

குமாரபாளையம் பேருந்து நிலையத்துக்கு வெளியே சேலம் சாலையில் ஒரு ஷேர் ஆட்டோ புதன்கிழமை சென்று கொண்டிருந்தது. அப்போது, அந்த வழியே சென்ற மொபெட் மீது ஷேர் ஆட்டோ மோதியது. இதில், மொபெட்டில் சென்ற ஈஸ்வரி (55), அவரது மகன் நந்தகுமார் (18) கீழே விழுந்து காயமடைந்தனர்.

விபத்து ஏற்படுத்திவிட்டு நிற்காமல் சென்ற ஷேர் ஆட்டோ சாலையில் நடந்து சென்ற பிரேமா (29), அவரது மகன் கரண் (6) ஆகியோர் மீதும் மோதியது. மேலும், வேகமாகச் சென்ற போது கோமதி (16) என்பவரின் கைப்பை ஷேர் ஆட்டோவில் சிக்கியது. இதில், இழுத்து கீழே தள்ளப்பட்ட மோமதியும் காயமடைந்தார்.

இவர்கள் அனைவரும் குமாரபாளையம் அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, ஈரோடு அரசு மருத்துவமனைக்கு தீவிர சிகிச்சைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இதுகுறித்த புகாரின் பேரில், அடுத்தடுத்து விபத்து ஏற்படுத்திவிட்டு தப்பியோடிய ஷேர் ஆட்டோ ஓட்டுநரை குமாரபாளையம் போலீஸார் தேடி வருகின்றனர்.

**லாரி மோதியதில் தொழிலாளி சாவு**

திருச்செங்கோட்டில் லாரி மோதியதில் தொழிலாளி புதன்கிழமை இரவு உயிரிழந்தார்.

கள்ளக்குறிச்சியைச் சேர்ந்தவர் சத்தியமூர்த்தி (27). இவர் கோவையிலிருந்து மும்பைக்கு நூல் சுமை ஏற்றிய லாரியை ஓட்டிச் சென்றார். திருச்செங்கோட்டில் உள்ள பட்டறையில் லாரியைப் பழுது பார்த்துவிட்டு செல்லும் போது பட்டறை மேட்டில் தொழிலாளி ஒருவர் மீது லாரி மோதியது. கீழே விழுந்த அவர் மீது லாரியின் சக்கரம் ஏறியது. இதில் அவர் அதே இடத்தில உயிரிழந்தார்.

இதுகுறித்து திருச்செங்கோடு நகரப் போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தினர். விபத்தில் உயிரிழந்தவர் பள்ளிபாளையம் ஆவரங்காட்டைச் சேர்ந்த தொழிலாளி ராஜேந்திரன் (50) என்பது விசாரணையில் தெரிய வந்தது. லாரியை ஓட்டிவந்த  சத்தியமூர்த்தி கைது செய்யப்பட்டுள்ளார். மேலும் விசாரணை நடைபெற்று வருகிறது.

**பப்பாளி மாவுப் பூச்சிகளை கட்டுப்படுத்தும் வழிமுறைகள்**

வெண்ணந்தூர் வட்டாரப் பகுதிகளில் பப்பாளி மாவுப் பூச்சிகளின் தாக்குதல் தற்போது தொடங்கியுள்ளதால், அதைக் கட்டுப்படுத்த விவசாயிகள் வேம்பு மருந்து தெளிக்கும் வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என வேளாண்மைத் துறை வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து வெண்ணந்தூர் வேளாண்மைத் துறை உதவி இயக்குநர் கு.சீனிவாசன் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

வெண்ணந்தூர் பகுதியில் தற்போது பப்பாளி மாவுப் பூச்சி தாக்குதல் தொடங்கியுள்ளது. விவசாயிகள் பயிர் சேதாரத்திற்கு முன் இந்தப் பூச்சிகளைக் கட்டுப்படுத்த வேண்டும். இதற்கு அசாடிராக்டின் 0.03 வேம்பு மருந்தை 25மிலி ஒரு டாங்கு நீரில் கலந்து காலை அல்லது மாலையில் இலை, தழை, தண்டுப் பகுதிகள் நன்கு நனையும்படி தெளிக்கலாம். இந்த வேம்பு மருந்து, வெண்ணந்தூர் வேளாண்மை விரிவாக்க மையம், மற்றும் அத்தனூர் துணை வேளாண்மை விரிவாக்க மையங்களை அணுகி மானியத்துடன் அசாடிராக்டின் 0.03 பெற்றுக் கொள்ளலாம்.

தற்போதைய சூழ்நிலையில் பப்பாளி மாவுப் பூச்சியின் தாக்கம் தென்படுகிறது. மேலும், வெயிலின் தாக்கம் அதிகரிக்கும் போது பூச்சிகளின் எண்ணிக்கை அதிகரித்து பயிரைப் பாதிக்கும். ஆகையால், தற்போதே அசாடிராக்டின் 0.03 தெளித்து விவசாயிகள் பயிரைப் பாதுகாத்திட வேண்டும் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது

**அலங்காநல்லூர் சர்க்கரை ஆலையில் கரும்பு அரவை தொடக்கம்**

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் தேசிய கூட்டுறவு சர்க்கரை ஆலையில் நடப்பு ஆண்டிற்கான கரும்பு அரவை வியாழக்கிழமை காலை தொடங்கியது. மாவட்ட ஆட்சியர் எல்.சுப்பிரமணியன் தலைமையில் ஆலையின் தலைவர் ஆர்.எஸ் ராம்குமார், சட்டப்பேரவை உறுப்பினர்கள் முத்துராமலிங்கம், கருப்பையா, சாமி, தமிழரசன் ஆகியோர் முன்னிலையில் கரும்பு கட்டுகள் இயந்திரப் பகுதிக்குள் எடுத்துப்போடப்பட்டு அரவை தொடங்கியது. ஆலையின் மேலாண்மை இயக்குநர் செம்புகுட்டி, தில்லி சிறப்பு பிரதிநிதி ஜக்கையன், மாவட்ட ஊராட்சித் தலைவர் தர்மராஜ், அலங்காநல்லுůர் ஒன்றிய அதிமுக செயலர் ரவிச்சந்திரன், தொழிற்சங்க மாவட்டத் தலைவர் முருகன், விவசாய சங்க நிர்வாகிகள் நல்லமணிகாந்தி, பழனிச்சாமி, அழகர்சாமி, அப்பாஸ் மற்றும் ஆலையின் அதிகாரிகள், கரும்பு விவசாயிகள், தொழிலாளர்கள் கலந்துகொண்டனர்.

ஆலையின் கரும்பு அரவை குறித்து அதிகாரிகள் கூறியதாவது: கடந்த ஆண்டு 2 லட்சத்து 25 ஆயிரத்து 239 டன் கரும்பு அரவை செய்யப்பட்டது. 2 லட்சத்து 15 ஆயிரத்து 190 மூட்டை சர்க்கரை உற்பத்தி செய்யப்பட்டது. கடந்த வருடம் 10 ஆயிரத்து 132 ஏக்கரில் கரும்பு சாகுபடி செய்யப்பட்டிருந்தது. 143 நாட்கள் கரும்பு அரைக்கப்பட்டிருந்தது.

கடந்த வருடம் கரும்பு டன் ஒன்றுக்கு ருபாய் 2 ஆயிரத்து 399 வழங்கப்பட்டது. நடப்பு ஆண்டிற்கான அரவை தற்போது தொடங்கப்பட்டுள்ளது. 7 ஆயிரத்து 600 ஏக்கர் வரை கரும்பு பதிவு செய்யப்பட்டுள்ளது. கடும் வறட்சியின் காரணமாக 1200 ஏக்கர் கரும்பு பயிர் பாதிக்கப்பட்டுள்ளது. தற்போது 6400 ஏக்கர் மட்டுமே தயார் நிலையில் உள்ளது. இதிலிருந்து 1 லட்சத்து 30 ஆயிரம் டன் கரும்பு அரைக்க இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்றனர்.

**விவசாயிகள் இயற்கை உரங்களை பயன்படுத்த வேண்டும்**

மண்ணின் வளத்தை அதிகரிக்க இலைதழை, இயற்கை உரங்களை விவசாயிகள் அதிகம் பயன்படுத்தவேண்டும் என தமிழக வேளாண்துறை முதன்மைச் செயலர் சந்தீப்சக்சேனா வலியுறுத்தினார். மதுரை வேளாண்மைக் கல்லூரியில் மூன்றுநாள் மண்டல வேளாண் பெருவிழாவை வியாழக்கிழமை தொடங்கிவைத்து அவர் பேசியதாவது: இந்திய மக்கள் தொகையில் 6 சதவீதம் மக்கள் தமிழகத்தில் வசிக்கிறார்கள். அவர்களுக்கான உணவு உற்பத்தி 4 சதவிகித நிலத்தில் 3 சதவிகித நீரைக் கொண்டுதான் உற்பத்தி செய்யப்பட்டுவருகிறது. மக்கள்தொகை மேலும் அதிகரித்துவருகிறது. ஆனால் நிலம், நீர் வளரவில்லை. இந்தச் சூழ்நிலையில் வேளாண் உற்பத்தியை அதிகரிப்பது பெரும் சவாலாக உள்ளது. அதனால்தான், தமிழக முதல்வர் இரண்டாம் பசுமைப்புரட்சியை அறிவித்துள்ளார். விவசாயிகள் வாழ்க்கையில் தொடர்ந்து வருமானம் கிடைக்கும் வகையில் திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகிறது. தற்போது மண்வளம் குறைந்துகொண்டே வருகிறது. இதனை கருத்தில்கொண்டு, பசுந்தழை, குப்பை உள்ளிட்ட இயற்கை உரங்கள் பயன்பாட்டை அதிகரிக்கவேண்டும். அதிகமகசூல் கிடைத்திட விவசாயிகள் சான்றளிக்கப்பட்ட விதைகளையே பயன்படுத்தவேண்டும் என பேசினார். விழாவில் தென்னிந்திய தொழில் கூட்டமைப்புத் தலைவர் பி.தியாகராஜன்

பேசியது: பல்வேறு தொழிலில் இந்தியா வளர்ந்துவந்த போதிலும் 90 சதவீத மக்கள் விவசாயத்தையே தொழிலாகச் செய்துவருகின்றனர். எனவே, பல்வேறு நிறுவனங்கள் விவசாயத்தில் ஈடுபடத்தொடங்கியுள்ளன. வேளாண் உற்பத்தியில் பிறநாடுகளைவிட நாம் அதிகம் முன்னேறிஉள்ளோம். ஆனால், விளைபொருள்களில் அறுவடைக்குப் பிந்தைய பாதுகாப்பில் மிகவும் பின்தங்கியுள்ளோம். உலகஅளவில் தரம்மேம்படுத்திய உணவுபொருள்கள் வர்த்தகத்தில் இந்தியாவின் பங்கு 2 சதவிகிதமே உள்ளது. மண்டல அளவில் அதிக மகசூல்தரும் பயிர் ரகத்தை தேர்வுசெய்து விவசாயிகள் அதிக லாபமடையவேண்டும் என்றார். தோட்டக்கலைத்துறை மற்றும் மலைப்பயிர்கள் துறை ஆணையர் சத்தியபிரபா சாஹூ பேசுகையில், அகிலஇந்திய அளவில் காய்கறி உற்பத்தியில் தமிழகம் முதலிடத்தில் உள்ளது. விவசாயிகள் உற்பத்தியாளராக இல்லாமல் விற்பனையாளராகவும் மாறவேண்டும்.

20 விவசாயிகள் சிறு குழுவாகச் சேர்ந்து மண்டல அளவில் 50 குழுக்களை இணைத்து நிறுவனமாக செயல்படும் திட்டம் தமிழக அரசால் விரைவில் செயல்படுத்தப்படவுள்ளது என்றார். தென்னிந்திய தொழில்கூட்டமைப்பு மேலாளர் கதிர்காமநாதன் வரவேற்றார். மதுரை வேளாண்கல்லூரி முதல்வர் சி.சின்னசுவாமி, மதுரை மேயர் ராஜன்செல்லப்பா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். அப்பல்லோ மருத்துவக் குழும துணைத் தலைவர் டாக்டர் ரோகிணி நன்றி கூறினார். தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் தென்மாவட்டங்களில் உள்ள ஆராய்ச்சி நிலையங்கள், கல்லூரிகளின் பல்வேறு துறைகள் சார்பிலும், வேளாண் அறிவியல் மையங்களில் பயிற்றுவிக்கப்பட்ட தொழில் முனைவோர், மற்றும் தனியார் வேளாண்துறை நிறுவனங்கள், பொதுத்துறை வங்கிகளின் வேளாண்மை கடன் பிரிவு சார்பிலும் 38 அரங்குகள் அமைக்கப்பட்டிருந்தன. இந்த கண்காட்சியை முதன்மைச் செயலர் திறந்துவைத்தார்.

இந்த அரங்குகளை தென் மாவட்ட விவசாயிகள் ஏராளமானோர் பார்வையிட்டனர். நவீன வேளாண் இயந்திரங்கள் செயல்விளக்கமும் நடைபெற்றது.

**"மஞ்சள், வேம்பு நேரடி உபயோகம் நோய் எதிர்ப்பு சக்தி தருகிறது'**

மஞ்சள், வேம்பு நேரடி உபயோகம், உடலிலுள்ள கெட்ட கொழுப்புகளை நீக்குவதோடு, நோய் எதிர்ப்பு சக்தியையும் தருவதாக, அமெரிக்க பல்கலைக்கழக உதவி பேராசிரியர் ராஜா சிவமணி தெரிவித்தார்.தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பயிர் மூலக்கூறுவியல் மற்றும் உயிரித் தொழில்நுட்ப மையம் சார்பில் "வேளாண்மைத் தாவரங்களைக் கொண்டு சரும நலத்தைக் காப்பது எப்படி?' என்ற தலைப்பில் சிறப்புரை புதன்கிழமை நடைபெற்றது.

இதில், அமெரிக்க வாழ் இந்தியரும், கலிபோர்னியா யூசி டேவிஸ் பல்கலைக்கழகத்தின் தோல் பராமரிப்பு வல்லுநருமான ராஜா சிவமணி பேசியது:

இயற்கையான தாவரங்களைக் கொண்டு நம் முன்னோர் பரிந்துரைப்பது போல, நமது வெளிப்புறத் தோலினை சிறந்த முறையில் பராமரிக்கலாம். மஞ்சள் மற்றும் வேம்பினை காலங்காலமாக குளியலின் போது உபயோகிப்பதன் மூலம், அந்த மூலிகைகளில் இருந்து நோய் தாக்காத சூழல் ஏற்பட்டு சரும நலன் பாதுகாக்கப்படுகிறது. மாறாக அந்த மூலிகைப் பொருட்களில் இருந்து எடுக்கப்படும் வேதிப்பொருட்களான குர்குமின், அசாடேரக்டின் ஆகியவற்றின் உபயோகத்தால் அவ்வளவான நன்மை சருமத்திற்கு கிடைப்பதில்லை. மஞ்சள் மற்றும் வேம்பின் நேரடி உபயோகம் நம் உடலிலுள்ள கெட்ட மற்றும் தேவையற்ற கொழுப்புகளை நீக்குவதுடன் நோய் எதிர்ப்பு சக்தியையும் தருகிறது.

ஆயுர்வேதத்திலும் மலைவாழ் மக்கள் கையாளும் மருத்துவத்திலும் உள்ள அனுகூலங்கள் விஞ்ஞான ரீதியாகக் கண்டறியப்பட்டு, அதை ஊக்கப்படுத்தும் வகையில் யூசி டேவிஸ் பல்கலைக்கழகமும், வேளாண்மைப் பல்கலைக்கழகமும் இணைந்து ஆராய்ச்சி மேற்கொள்வது குறித்து விவாதிக்கப்பட உள்ளது.

குழந்தைகளுக்கு ஏற்படும் ஊட்டச்சத்து பற்றாக்குறையை தாவர மற்றும் வேளாண்மைப் பயிர்களைக் கொண்டு சரிசமமான சத்துணவுப் பொருட்களை ஏற்படுத்துவது குறித்து விரிவான ஆய்வகப் பரிசோதனை செய்யப்பட உள்ளது என்றார்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

விஷ வண்டு கூடு அழிப்பு

கும்மிடிப்பூண்டி:பஞ்சு மரத்தில் இருந்த, விஷ வண்டின் கூட்டை, தீயணைப்பு துறையினர் அழித்தனர்.கும்மிடிப்பூண்டி அடுத்த, ஆரம்பாக்கம், பாரதி நகரில் உள்ள, ஒரு பஞ்சு மரத்தில், 30 அடி உயரத்தில், மூன்று அடி நீளத்திற்கு, விஷ வண்டுகள் கூடி கட்டி இருந்தன.விஷ வண்டுகள், அங்குள்ள மக்களை அச்சுறுத்தி வந்தன. இதையடுத்து, அப்பகுதி மக்கள், கும்மிடிப்பூண்டி தீயணைப்பு மற்றும் மீட்பு படையினருக்கு தகவல் கொடுத்தனர்.நிலைய அலுவலர் முருகேசன் தலைமையில் சென்ற தீயணைப்பு படையினர், தண்ணீர் பீச்சி அடித்து, விஷ வண்டு கூட்டை கலைத்தனர்.வேளாண் உதவி இயக்குனர் தகவல்

அவலூர்பேட்டை:பட்டா நிலங்களில் பண்ணை குட்டைகள் அமைத்தால் பல மடங்கு பலனை பெறலாம் என வேளாண் உதவி இயக்குநர் தகவல் தெரிவித்தார். மேல்மலையனூர் வேளாண் உதவி இயக்குனர் பழனி வேலு விடுத்துள்ள செய்திக் குறிப்பு:அவலூர்பேட்டை, சாத்தாம்பாடி மற்றும் மேல்மலையனூர் வருவாய் கிராமங்களில் மாவட்ட நீர்வடிப் பகுதி மேம்பாட்டு முகமை திட்டத்தில் 45 பண்ணை குட்டைகள் அமைக்கப்பட்டுள்ளன. விவசாயிகள் இரண்டு மடங்கு மகசூலை பெறவும், 3 மடங்கு வருமானத்தை ஈட்டவும் இப்பண்ணை குட்டை திட்டத்தை தமிழக முதல்வர் ஏற்படுத்தியுள்ளார்.இதில் தென்பாலை கிராமத்தில் அமைத்த 10 குட்டைகளில் 2 குட்டைகளில் மழை நீர் நிரம்பி உள்ளன. வீணாகி ஓடும் மழைநீர் இந்த குட்டைகளில் சேமிப்பதால் நிலத்தடி நீர் மட்டம் உயருகிறது. விவசாயிகள் மீன், வாத்து வளர்க்கலாம். இதனால் உபரி வருமானம் அதிகரிக்கும் . தென்பாலையில் நீர் நிறைந்த பண்ணை குட்டைகளிலிருந்து நீரை இறைப்பதற்கு 50 சதவீதம் மானியத்தில் 5 எச்.பி., ஆயில் இன்ஜின் தேவைக்கு விவசாயிகள் உதவி வேளாண் அலுவலர்களை அணுகி பயனடையலாம்.

விவசாயிகளுக்கு அழைப்பு 100 சதவீதம் மானியத்தில் சொட்டுநீர் பாசனம் வழங்கல்

ராசிபுரம்: "தோட்டக்கலை பயிர்களுக்கு, 100 சதவீத மானியத்தில், சொட்டு நீர் பாசனம் வழங்கப்படும்' என, நாமகிரிப்பேட்டை தோட்டக்கலை உதவி இயக்குனர் புவனேஸ்வரி தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்ட அறிக்கை: தேசிய நுண்ணீர் பாசன திட்டத்தின் கீழ், 100 சதவீத மானியத்தில், சொட்டு நீர் பாசனம் அமைக்க, ஐந்து ஏக்கர் வரை உள்ள சிறு, குறு விவசாயிகளுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. தோட்டக்கலை பயிர்களான மஞ்சள், வாழை, மரவள்ளி, வெங்காயம் மற்றும் காய்கறிளை சாகுபடி செய்யும் விவசாயிகள், உரிய ஆவணங்களோடு, உதவி இயக்குனர் அலுவலகத்தில் விண்ணப்பிக்கலாம். தாசில்தாரிடம் இருந்து சிறு, குறு விவசாயி சான்று, சிட்டா அசல், நகல், வி.ஏ.ஓ.,விடமிருந்து சாகுபடி செய்யப்பட்ட பயிர் பரப்பு, கிணறு விவரம், மின் மோட்டாரின் திறன், மின் இணைப்பு எண், அடங்கல் வரைபடம், ரேஷன் கார்டு நகல் ஆகியவை வேண்டும்.அதேபோல், விவசாயி, குத்தகைதாரராக இருந்தால், சார் பதிவாளர் அலுவலகத்தில், பதிவு செய்யப்பட்ட ஒப்பந்த பத்திரம், ஐந்து ஃபோட்டோ உள்ளிட்ட ஆவணங்களை இணைக்க வேண்டும். தகுதியான விவசாயிக்கு, உடனடியாக சொட்டுநீர் பாசன அமைக்க வழிவகை செய்யப்படும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மழையால் "வயலாக' மாறிய தெங்குமரஹடா ரோடு

சத்தியமங்கலம்: பவானிசாகரில் இருந்து தெங்குமரஹடா செல்லும் வழியில், தொடர் மழை பெய்வதால், அங்குள்ள மண் ரோடு வயல் வெளியாக மாறியது. ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் அடுத்துள்ள பவானிசாகரில் இருந்து, 35 கி.மீட்டர் தொலைவில் அடர்ந்த வனப்பகுதியில் உள்ளது தெங்குமரஹடா வன

கிராமம். இக்கிராமத்தை சுற்றிலும் அல்லிமாயாறு, கல்லாம்பாளையம் உள்ளிட்ட கிராமங்கள் உள்ளது. இக்கிராமங்கள், நீலகிரி மாவட்டத்துக்கு உட்பட்டதாகும். ஆனால் இங்கு செல்ல வேண்டும் எனில், பவானிசாகர் வந்துதான் செல்ல வேண்டும். இங்கு ஒரே ஒரு அரசு பஸ் மட்டுமே சென்று வருகிறது. மேலும், நீலகிரி மாவட்டம் கோத்தகிரி அருகே உள்ள சோலூர்மட்டத்தில் இருந்து, ஒரு அரசு பஸ் வருகிறது. இந்த பஸ்சும், மழை வந்தால் நிறுத்தப்படும். இங்கு வசிக்கும் மக்களுக்கு, இப்பகுதிக்கு நாள்தோறும் சென்று வரும் டெம்போக்கள் மட்டுமே போக்குவரத்து வாகனமாக உள்ளது. பவானிசாகரில் இருந்து தெங்குமரஹடா செல்லும் ரோடு, மண் ரோடாக உள்ளது. குண்டும், குழியுமாக திகழும் இந்த ரோட்டுக்கு, இப்பகுதி மக்கள் அவ்வப்போது சொந்தமாக மண் குவித்து, சீரமைத்து வருகின்றனர்.தற்போது, இப்பகுதி புலிகள் காப்பகம் பகுதி என்பதால், இந்த ரோடு தார்ரோடாக மாற்றுவதற்கு அனுமதியில்லாமல் போய்விட்டது. தற்போது இப்பகுதியில் தொடர்ந்து மழை பெய்து வருவதால், இந்த ரோடு சகதியாக மாறிவிட்டது. இதனால் நாள்தோறும் சென்றுவரும் டெம்போ போக்குவரத்தும் பாதிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. ஆகவே இந்த ரோட்டை சீரமைத்து கொடுக்க வேண்டும், என்று இப்பகுதி மக்கள் கோரிக்கை வைக்கின்றனர்.

குறையாத அரிசி விலையால் அதிருப்தி

ஈரோடு: தொடர்ந்து பல வாரமாக அரிசி விலை குறையாததால், மக்கள் அதிருப்தியில் உள்ளனர். கர்நாடகாவில் இருந்து, புதிய ரக அரிசி வரத்தானால், விலை குறையும், என வியாபாரிகள் தெரிவித்தனர்.

ஈரோடு பெரிய அக்ரஹாரத்தில், பத்து ஆண்டாக வாரந்தோறும் வியாழக்கிழமையில் அரிசி சந்தை நடந்து வருகிறது. ஈரோடு மாவட்டத்தில் இருந்து, கோபி, மொடக்குறிச்சி, பெருந்துறை, செ ன்னிமலை, பவானி, கொடுமுடி மற்றும் காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள ரைஸ் மில்களில் இருந்தும், 25, 75 கிலோ

எடையுள்ள அ ரிசி மூடைகளாக, "பேக்' செய்யப்பட்டு, விற்பனைக்கு வருகிறது. அரிசி மூட்டையை, நேரடியாக மில் உரிமையாளர்களும், வியாபாரிகளும், விற்பனை செய்வதால், இச்சந்தையில் குறைவான விலையில் அரிசி கிடைக்கிறது. இதனால் வாரந்தோறும் பொதுமக்களும், சிறு வியாபாரிகளும் அரிசி வாங்குவதற்கு குவிகின்றனர். வாரந்தோறும், 3,000 முதல் 3,500 வரை அரிசி மூட்டைகள் விற்பனையாகி வருகிறது.

தொடர்ந்து பல வாரமாக, அரிசி விலை குறையாததால், மக்கள் அதிருப்தியில் உள்ளனர்.

இதுகுறித்து அரிசி ஆலை உற்பத்தியாளர் சங்க மாவட்ட செயலாளர் கந்தசாமி கூறியதாவது:

கர்நாடகாவில் இருந்து, ஈரோடு மாவட்டத்துக்கு அரிசி இறக்குமதி ஆகிறது. கர்நாடகாவில், மழை பெய்து வருவதால், நெல்லின் விளைச்சல் அமோகமாக உள்ளதாக, அப்பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

ஈரோடு மாவட்ட அரிசி சந்தையில், புதிய அரிசியின் வரத்து இல்லாததால், விலையில் எந்த மாற்றமும் இல்லை. கர்நாடகா டீலக்ஸ் (ஒரு ஆண்டு பழையது) 75 கிலே ா, 3,350 முதல், 3,450 ரூபாய் வரையும், 75 கிலோ தமிழ்நாடு பி.பி .டி., அரிசி, 3,050 முதல், 3,150 ரூப ாய் வரையும், தமிழ்நாடு அரிசி பொன்னி, 2,300 முதல், 2,400 ரூபாய் வரை விற்பனையானது.

ஏ.டி.டி., 45 ரக அரிசி, 75 கிலோ, 2,000 முதல், 2,100 ரூபாய் வரையும், ஏ.டி.டி., 36 ரக அரிசி, 75 கிலோ, 2,150 முதல், 2,250 ரூபாய் வரையும், இட்லி அரிசி, 2,000 முதல், 2,100 ரூபாய் வரையும் விற்பனையானது.கர்நாடகாவில் இருந்து புதிய அரிசி வரத்தானால், அரிசியின் விலை குறையும், என எதிர்பார்க்கப்படுகிறது, என்றார்.

கடும் பனி பொழிவால் நெற்பயிர் வளர்ச்சி "பாதிப்பு'

சத்தியமங்கலம்: சத்தியமங்கலம் பகுதியில், கடந்த சில நாட்களாக, கடும் மூடுபனி ஏற்பட்டு வருவதால், நெற்பயிர் வளர்ச்சி கடுமையாக பாதித்து உள்ளது.
பவானிசாகர் அணையில் இருந்து, கீழ்பவானி வாய்க்கால் மூலம் ஒற்றைப்படை மதகு பகுதிக்கு, கடந்த ஆகஸ்ட் மாதம் முதல் பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்பட்டு உள்ளது. இதனால், சத்தியமங்கலம் மற்றும் சுற்றுப்பகுதியில், பத்தாயிரம் ஏக்கருக்கு மேல் விவசாயிகள் நெற்பயிர் நடவு செய்துள்ளனர்.
பொதுவாக நெற்பயிருக்கு பனி ஏற்புடையதல்ல. பனி இருந்தால் நெற்பயிர் நிறம் மாறி, பல்வேறு நோய்களால் பாதிக்கும். மேலும் அதன் வளர்ச்சி தடைபடும். இதிலும் நடவு செய்யப்பட்டு, ஒரு மாதத்துக்குள் பனி ஏற்பட்டால், நெற்பயிர் வளர்ச்சி முற்றிலும் பாதிக்கும்.
தற்போது விவசாயிகள் நடவு செய்துள்ள நெற்பயிர், நன்றாக பசுமையாக காட்சியளிக்கிறது. இந்நிலையில், சத்தியமங்கலம் பகுதியில், கடந்த 15 நாட்களாக கடும் மூடுபனி மற்றும் குளிர் ஏற்பட்டு வருகிறது. இரவு, ஏழு மணி முதல் குளிர் காற்று வீச தொடங்கி விடுகிறது.
அதிகாலை நேரத்தில், வயலில் உள்ள நெற்பயிரை, பனி தண்ணீர் ஆக்கிரமிப்பு செய்து கொள்கிறது. சூரியன் உதயமாகி, மூன்று மணி நேரம் கழித்தே, நெற்பயிரை தொற்றிக்கொண்டுள்ள பனி தண்ணீர் முழுமையாக விலகுகிறது.
இதனால், நெற்பயிர் வளர்ச்சி மிகவும் பாதித்துள்ளது. குறிப்பாக, பால் பிடிக்கும் பருவம், நெல் மணிகள் தோன்றிய பருவத்தில் உள்ள செடிகள், கருப்பு நிறமாகி வருவதால், விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

கத்தரியை தாக்கும் காய்துளைப்பான் :கட்டுப்படுத்த அதிகாரி யோசனை

குளித்தலை: "கத்தரியை தாக்கும் காய் துளைப்பானை உரிய முறையில் கட்டுப்படுத்த வேண்டும்' என தோகைமலை வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர் ராஜேந்திரன் கூறினார்.

அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

கத்தரி சாகுபடி செய்யப்படும் அனைத்து இடங்களிலும் கத்தரி இளந்தண்டு காய் துளைப்பான் தாக்குதல் மிக அதிகமாக காணப்படும். இதன் காரணமாக கத்தரி நடவு செய்த 20 நாட்களில் இருந்து அறுவடை முடியும் வரை தொடர்ந்து பூச்சிக்கொல்லிகளை விவசாயிகள் அதிகள வில் பயன்படுத்துகின்றனர்.

இதனால் சுற்றுப்புறச்சூழல் மாசு அடைகிறது. இந்த பூச்சியானது கத்திரி உருளைக் கிழங்கு பாகல் பச்சைப் பட்டாணி மணத்தத்தக்காளி சுண்டை கண்டங்கத்திரி மற்றும் ஊமத்தை செடிகளை தாக்குகிறது.

கத்தரி நடவு செய்து 15 முதல் 20 நாட்களில் இருந்து இந்த புழுவின் தாக்குதல் தொடங்குகிறது. புழுக்கள் செடிகளின் நுனிக்குருத்தின் கீழ் துளைத்து உள்பகுதியை உண்பதால் குருத்துப் பகுதி வாடி காய்ந்து விடுகிறது.

அதன்பின் பூக்கும் மற்றும் காய்க்கும் தருணத்தில் பூ மொட்டுகள் பூக்கள் மற்றும் பிஞ்சுக்காய்களையே இந்த புழு தாக்குகிறது. இதனால் பூ மொட்டுகளும் பூக்களும் உதிர்ந்துவிடும். காய்பிடிப்புத் திறன் பாதிக்கப்பட்டு மகசூல் 75 சதவீதம் குறைய வாய்ப்புள்ளது.தாக்கப்பட்ட காய்களின் மேல் துவாரங்கள் காணப்படும். இந்த துவாரங்களின் மேல் புழுவின் கழிவுப் பொருட்கள் தள்ளப்பட்டிருப்பதைக் காணலாம்.கத்தரி இளந்தண்டு மற்றும் காய்த்துளைப்பான் ஓராண்டில் பல வாழ்க்கை சுழற்சிகளை மேற்கொள்கிறது. இதனால் ஆண்டு முழுவதும் இப்பூச்சியின் தாக்குதல் காணப்படும். தாய் அந்துப் பூச்சியானது வெண்நிற இறக்கைகளை கொண்டது.

இறக்கைகளின் மேல் பழுப்பு கலந்த சிவப்பு நிறக்கோடுகள் காணப்படும். ஒரு தாய் அந்து பூச்சி 80 முதல் 250 முட்டைகள் வரை இடும். முட்டைகள் இலையின் பின்புறம் குருத்துக்கள் பூ மற்றும் காய்களின் புள்ளி வட்டங்களில் காணப்படும். முட்டைகள் தட்டையாகவும் வெள்ளையாகவும் இருக்கும். முட்டைப்பருவம் 3 முதல் 4 நாட்கள். இளம்புழுக்கள் வெண் நிறமாக இருக்கும்.

முட்டையிலிருந்து வெளி வந்த 6 மணி நேரத்திற்குள் இந்த புழு குருத்து அல்லது காய்களை துளைத்து உள்ளே சென்று விடும். பெரும்பாலும் குருத்துகளைவிட இப்புழுக்கள் காய்களையே விரும்பி உண்ணும்.

கத்தரியை மட்டும் தொடர்ந்து பயிரிடாமல் தானியங்கள் பயறு வகைகள் கொண்ட பயிர்களை சுழற்சி முறையில் சாகுபடி செய்ய வேண்டும்.தாக்குதல் அதிகமாக காணப்படும் நேரங்களில் வேப்பங்கொட்டைச்சாறு 5 சதவீதம் அல்லது புரபனோபாஸ்சை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 மிலி அல்லது கார்பரில் நனையும் தூள் ஏக்கருக்கு 400 கிராம் என்ற அளவிலும் தெளித்து கட்டுப்படுத்தலாம்.

பூக்கும் தருணத்தில் மாலத்தியான் 50 இசி மருந்தினை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 மிலி வீதம் 15 நாட்கள் இடைவெளியில் தெளித்து கட்டுப்படுத்தலாம். மருந்து தெளிக்கும் போது காய்களை பறித்துவிட்டு தெளிக்க வேண்டும்.

## கால்நடை வளர்ப்பு இலவச பயிற்சி

மதுரை:மதுரை திருப்பரங்குன்றத்தில் உள்ள கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலையின் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில், கால்நடை வளர்ப்பு குறித்த இலவச பயிற்சி வகுப்புகள் நடக்கின்றன.

டிச., 17ல், கறவை மாடு வளர்ப்பு குறித்தும், டிச.,18ல் வெள்ளாடு வளர்ப்பு குறித்தும், டிச.,19ல் முயல் வளர்ப்பு குறித்தும் பயிற்சி அளிக்கப்படும்.

ஆர்வமுள்ளவர்கள், சுயதொழில் துவங்க விரும்பும் இளைஞர்கள், பெண்கள் பங்கேற்கலாம். தங்கள் பெயரை நேரில் அல்லது 0452-248 3903ல் தெரிவிக்கலாம்

என, பேராசிரியர் பண்ணை முருகானந்தன் தெரிவித்தார்.விவசாயிகளுக்கு வழிகாட்டும் வேளாண் கண்காட்சிகோவை : "விவசாயிகள் பலன் அடையும் வகையில், வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களை பயன்படுத்தி வேளாண் பல்கலை புதிய விதை மற்றும் பயிர் ரகங்களை அறிமுகப்படுத்தி வருகிறது' என, வேளாண் பல்கலை பதிவாளர் ரபீந்திரன் கூறினார்.

கோவையில், விவசாயம் மற்றும் தோட்டக்கலை கண்காட்சி சிங்கநல்லூர் விஜயா கண்காட்சி வளாகத்தில் நேற்று துவங்கியது. கண்காட்சியை துவக்கி வைத்த கோவை வேளாண் பல்கலை பதிவாளர் ரபீந்திரன் கூறியதாவது:

விவசாயிகள் பலன் அடையும் வகையில், வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களை பயன்படுத்தி வேளாண் பல்கலை புதிய விதை மற்றும் பயிர் ரகங்களை அறிமுகப்படுத்தி வருகிறது. பயிர் பாதுகாப்பு, மண் வளப்பாதுகாப்பு, உரம் மற்றும் பூச்சிக்கொல்லிகளை எவ்வாறு பாதுகாப்பாக பயன்படுத்துவது உள்ளிட்ட பல்வேறு ஆலோசனைகளை விசாயிகளுக்கு வேளாண் பல்கலை வழங்கி வருகிறது. மேலும், பெண்கள் சுயதொழில் செய்து முன்னேற வேண்டும் என்ற நோக்கத்தோடு உணவு பதப்படுத்துதல், மதிப்பூட்டும் பொருட்கள் மற்றும் பேக்கரி உணவு பண்டங்கள் தயாரித்தல் உள்ளிட்ட துறைகளில் இலவச பயிற்சி அளிக்கப்படுகிறது. இக்கண்காட்சியில்,, வேளாண் பல்கலை சார்பில் 12 ஸ்டால்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதில், விவசாயிகள் தங்களுக்கு தேவையான ஆலோசனை மற்றும் தகவல்களை பெற்றுக்கொள்ளலாம்.இவ்வாறு, ரபீந்திரன் கூறினார்.இக்கண்காட்சியில், நூற்றுக்கும் மேற்பட்ட ஸ்டால்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதில், வேளாண் உற்பத்தி பொருட்கள், வேளாண் தொழிலுக்கு பயன்படும் கருவிகள், புதிய வேளாண் கண்டுபிடிப்பு கள் இடம் பெற்றுள்ளன. இக்கண்காட்சி வரும் 8ம் தேதி வரை நடக்கிறது.

வரகு பயிர் செய்ய விவசாயிகள் தயக்கம் சாகுபடி பரப்பளவு குறைந்து வருகிறது

விருத்தாசலம்:போதிய விலை கிடைக்காததால், பாரம்பரியம் மிக்க வரகு பயிர் சாகுபடி பரப்பளவு குறைந்து வருகிறது.

வடகிழக்குப் பருவமழையைப் பயன்படுத்தி, மானாவாரியில் வேர்க்கடலை, உளுந்து, பச்சை பயறு, எள், சோளம், வரகு, கேழ்வரகு, கொள்ளு உள்ளிட்ட தானிய வகை பயிர்கள் செய்து வந்தனர். வரகுக்கு சந்தையில் போதிய விலை கிடைக்காததால், அதனை பயிர் செய்ய விவசாயிகள் தயக்கம் காட்டுகின்றனர். மாறாக அதிக லாபம் தரும் மக்காச்சோளம், உளுந்து, பருத்தி, மஞ்சள் போன்றவற்றை பயிர் செய்கின் றனர். விருத்தாசலம், மங்கலூர், வேப்பூர், கோ.பவழங்குடி, மங்கலம்பேட்டை, பெண்ணாடம், திட்டக்குடி, சிறுபாக்கம், தொரவலூர் பகுதிகளில் கடந்த 2010ல் 15 ஆயிரம் ஏக்கரில் பயிரிடப்பட்ட வரகு, நடப்பாண்டு 6,000 ஏக்கராக குறைந்துள்ளன.

கோ.பவழங்குடி விவசாயி ஒருவர் கூறுகையில், "ஆகஸ்ட் - செப்டம்பர் மாதங்களில் வரகு சாகுபடி துவங்கும். வடகிழக்குப் பருவ மழையில் விளைந்து விடும். போதிய விலை கிடைக்காததால், பல தலைமுறைகளாக பயிர் செய்து வந்த வரகு பயிர் செய்ய யாரும் முன்வரவில்லை. லாபம், அரசு மானியம் கிடைக்கும் பயிர்களான மக்காச்சோளம், உளுந்து போன்ற பயிர்களுக்கு மாறவேண்டியுள்ளது' என்றார்.

வேளாண் இணை இயக்குனர் ராதாகிருஷ்ணன் கூறுகையில், "வரகு சாகுபடி செய்ய ஏக்கருக்கு 1,500 ரூபாய் வரை செலவாகும். 2,500 ரூபாய் வரை மட்டுமே வருவாய் கிடைப்பதால் விவசாயிகள் அதிக லாபம் தரும் பயிர்களான மக்காச்சோளம், பருத்தி பயிர்களை சாகுபடி செய்கின்றனர். இதனால், வரகு சாகுபடி பரப்பளவு படிப்படியாக குறைந்து வருகிறது' என்றார்.

## புலிகள் கணக்கெடுப்பில் மாணவர்கள் ஆர்வம்

நாகர்கோவில்: தேசிய புலிகள் மற்றும் மாமிச உண்ணிகள் கணக்கெடுப்பு தமிழகம் உட்பட தென் மாநிலங்களில் அடர்ந்த வன பகுதியில் ஒரே நேரத்தில் நடக்கிறது. இந்த பணிகள் வரும் 16ம் தேதி முதல் 22 வரை நடக்கிறது. குமரி மாவட்ட வனப்பகுதியில் நடைபெறும் இப்பணியில், வனத்துறை ஊழியர்களுடன் தன்னார்வலர்களும் பங்கேற்கலாம், என்று வனத்துறை அறிவித்திருந்தது. மாவட்ட வனத்துறை அலுவலகத்தில் 54 பேர் பதிவுசெய்தனர். இவர்களில் 50 சதவீதத்திற்கும் மேல் கல்லுரி மாணவர்கள். மேலும் கணக்கெடுப்பில் கலந்து கொள்ள ஆர்வம் தெரிவித்து, கல்லுரி மாணவிகளும் வந்தனர். அடர்ந்த வனபகுதியில் கணக்கெடுப்பு நடப்பதால், குறைந்தது 3 நாட்கள் தங்கி இருக்கவேண்டும். எனவே, மாணவிகள் அவர்களது பெற்றோர் மற்றும் கல்லுரி முதல்வரின் அனுமதி கடிதம் பெற்று வருமாறு, வனத்துறை சார்பில் தெரிவிக்கப்பட்டது.பெயர் பதிவு செய்தவர்களுக்கு வரும் 14ல் வனத்துறை சார்பில் சிறப்பு பயிற்சி அளிக்கப்பட்ட பின்னரே வனபகுதிக்கு அழைத்துசெல்லப்படுகின்றனர்.

## மூலிகை உணவகத்தில் அவல் கேசரி

சென்னை: சென்னை மாநகராட்சி அலுவலகத்தில், மூலிகை உணவகம் திறந்து, நேற்றுடன் ஓராண்டு நிறைவடைந்ததை முன்னிட்டு, நேற்று மதிய உணவுடன், அவல் கேசரி இலவசமாக வழங்கப்பட்டது.

சென்னை மாநகராட்சி தலைமை அலுவலகமான ரிப்பன் மாளிகையில் இருந்த வழக்கமான உணவகம் மாற்றப்பட்டு, உணவே மருந்து; மருந்தே உணவு என்ற அடிப்படையில், கடந்த ஆண்டு டிச.,5ம் தேதி மூலிகை உணவகம் திறக்கப்பட்டது. நேற்றுடன் ஓராண்டு நிறைவு பெற்றதை முன்னிட்டு, நேற்று அங்கு மதிய உணவு சாப்பிட்ட பொதுமக்களுக்கு இலவசமாக அவல் கேசரி வழங்கப்பட்டது. இந்த உணவகத்தில் மூலிகை உணவுகள் மட்டுமல்லாது, மூலிகை பொடிகளும் விற்கப்படுகின்றன.

## ஆண்டுக்கு ஒருமுறை பூக்கும் செங்காந்தாள் : மேற்கு தொடர்ச்சி மலையில் பூத்துள்ளது



ராஜபாளையம்:

ஆண்டுக்கு ஒருமுறை பூக்கும், மருத்துவ குணம் கொண்ட, செங்காந்தாள் மலர்கள், விருதுநகர் மாவட்டம், ராஜபாளையம், மேற்கு தொடர்ச்சி மலையடிவாரத்தில் பூத்துள்ளன.

குளிர்ச்சியான இடம், நீர்நிலைகள் அருகே, செங்காந்தாள் செடிகள் வளரும். இதன் மலர்கள் சிவப்பு, வெளிர்மஞ்சள் நிறத்தில் இருக்கும். தண்டும், மலரும் மருத்துவ குணமுடையவை. ஆண்டுக்கு ஒரு முறை, கார்த்திகை மாதத்தில் மட்டும் பூக்கும், இந்த பூக்கள், ராஜபாளையத்தில், மேற்கு தொடர்ச்சி மலையடி வாரத்தில், தற்போது பூத்துள்ளன.

இந்த மலர் பற்றி, சித்த மருத்துவர் ஒருவர் கூறியதாவது: இந்த செடியின் மலர்கள் சிவப்பு, கருப்பு, வெள்ளை நிறம் என, மூன்று வகைகளாக உள்ளன. சிவப்பு பூக்கள் மட்டும் அதிகமாகவும், மற்றவை அரிதாகவும் காணப்படும். செடியின் கிழங்கு விஷத்தன்மையுடையது. பசுவின் கோமியத்தில் ஊறவைத்து, நஞ்சு முறிக்கப்பட்டு, பாதரசத்துடன் கலந்து, சித்த மருத்துவத்தில், வலி நிவாரணி மருந்துகள் தயாரிக்க பயன்படுகிறது. இந்த மலர்கள், சமீப காலமாக வெளிநாட்டிற்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இவ்வாறு சித்த மருத்துவர் கூறினர்.

**பாசுமதி ஏற்றுமதி 40 லட்சம் டன்னை தாண்டும் புதிய ரகம், தேவை அதிகரிப்பு**



புசா பாசுமதி 1509 ரகத்தின் வரவால், நாட்டின் பாசுமதி அரிசி ஏற்றுமதி, நடப்பு நிதியாண்டில், 40 லட்சம் டன்னை தாண்டும் என, எதிர்பார்க்கப்படுகிறது.இது, கடந்த நிதியாண்டில், மேற்கொள்ளப்பட்ட ஏற்றுமதியை (34.60 லட்சம் டன்) காட்டிலும், 11 சதவீதம் அதிகமாகும்.புசா பாசுமதி ரகம்இந்திய வேளாண் ஆராய்ச்சிநிறுவனத்தால் மேம்படுத்தப்பட்ட, புசா பாசுமதி 1509 ரக அரிசி, வர்த்தக ரீதியில் அறிமுகப்படுத்தப்பட்டு, நடப்பு கரீப் பருவத்தில் பயிரிடப்பட்டுள்ளது.

ஒரு ஹெக்டேருக்கு இப்புதிய ரகபாசுமதி அரிசியின் உற்பத்தி, 6.5 டன்னாக இருக்கும்.அதேசமயம், பாப்புலர் புசா 1121 ரக பாசுமதி விளைச்சல், ஒரு ஹெக்டேருக்கு, 4.5 டன் அளவிற்கே இருக்கும்.இதனுடன் ஒப்பிடும் போது, புதிய புசா ரக வரவால், ஒரு ஹெக்டேருக்கு, 1.5 டன் பாசுமதி அரிசி கூடுதலாக கிடைக்கும்.இதையடுத்து, நடப்பாண்டில், புசா ரக பாசுமதி அரிசி உற்பத்தி, 30 ஆயிரம் டன்னாக இருக்கும் என, மதிப்பிடப்பட்டுள்ளது.கடந்த 2010–11ம் நிதியாண்டில், நாட்டின் பாசுமதி அரிசி ஏற்றுமதி, அளவின் அடிப்படையில், 23.70 லட்சம் டன்னாக இருந்தது. இது, ரூபாய் மதிப்பின் அடிப்படையில், 11,355 கோடியாகும்.இது, 2011–12ம் நிதியாண்டில் முறையே, 31.80 லட்சம் டன், 15,450 கோடி ரூபாயாக இருந்தது.சென்ற 2012–13ம் நிதியாண்டில், நம்நாட்டிலிருந்து, 19,409 கோடி ரூபாய் மதிப்பிலான, 34.60 லட்சம் டன் பாசுமதி அரிசி ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது என, ‘அபெடா’ புள்ளிவிவரத்தில்தெரிவிக்கப்பட்டுள்ளது. இங்கிலாந்துஇந்நிலையில், மேற்கு ஆசியா,இங்கிலாந்து, அமெரிக்கா ஆகிய நாடுகளில், இந்திய பாசுமதி அரிசிக்கான தேவை சிறப்பான அளவில் வளர்ச்சி கண்டுள்ளது.இதனை எடுத்துக்காட்டும் விதமாக, நடப்பு 2013–14ம் நிதியாண்டின் முதல் ஆறு மாத காலத்திலேயே, நாட்டின் பாசுமதி அரிசி ஏற்றுமதி, 19.30 லட்சம் டன்னை தாண்டியுள்ளது. இதன் மதிப்பு, 14,118 கோடி ரூபாயாகும்.
எனவே, நடப்பு நிதியாண்டில், நாட்டின் ஒட்டு மொத்த பாசுமதி அரிசி ஏற்றுமதி, 40

லட்சம் டன்னை எட்டும் என, இந்திய அரிசி ஏற்றுமதியாளர்கள் கூட்டமைப்பின் தலைவர் எம்.பி. ஜிண்டால் தெரிவித்தார்.கொத்தவரைசென்ற 2011–12ம் நிதியாண்டில், ஒட்டு மொத்த வேளாண் பொருட்கள் ஏற்றுமதியில், 16,523.87 கோடி ரூபாய் பங்களிப்புடன், கொத்தவரை ஏற்றுமதி முதலிடத்தில் இருந்தது. அப்போது, பாசுமதி அரிசி ஏற்றுமதி, 15,449.60 கோடி ரூபாய் என்ற அளவில் இருந்தது.சென்ற 2012–13ம் நிதியாண்டில், இவற்றின் ஏற்றுமதி, முறையே, 21,287.01 கோடி ரூபாய் மற்றும் 19,419.39 கோடி ரூபாய் என்ற அளவில் இருந்தன.ஆனால், நடப்பு நிதியாண்டின் ஒட்டு மொத்த வேளாண் பொருட்கள் ஏற்றுமதியில், பாசுமதி அரிசி முதலிடத்தை பிடிக்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கு, சர்வதே சசந்தையில் கொத்தவரையின் விலை சரிவடைந்ததே முக்கிய காரணமாகும். இரண்டுஆண்டுகளுக்கு முன்பாக, ஒருகுவிண்டால், கொத்தவரையின் விலை, 1 லட்சம் ரூபாயாக இருந்தது. இது தற்போது, 85 சதவீதம் வீழ்ச்சி கண்டு, 15 ஆயிரம் ரூபாயாக சரிவடைந்துள்ளது. அதேசமயம், இதே காலத்தில், சர்வ தேச சந்தையில், ஒரு குவிண்டால்,பாசுமதி அரிசியின் விலை, 50 சதவீதம் அதிகரித்து, 48,610 ரூபாயிலிருந்து, 73,150 ரூபாயாக உயர்ந்துள்ளது.வளர்ச்சிகடந்த 2011–12ம் நிதியாண்டுடன் முடிவடைந்த நான்கு ஆண்டுகளில், இந்தியாவின் பாசுமதி அரிசி ஏற்றுமதி, ஒட்டு மொத்த அளவில் ஆண்டுக்கு சராசரியாக, 22 சதவீதம் வளர்ச்சி கண்டுள்ளது என, தரக்குறியீட்டு நிறுவனமான ‘கேர்’ தெரிவித்துள்ளது.இதற்கு, சவுதி அரேபியா, ஐக்கிய அரபு நாடுகள், ஈராக், குவைத் ஆகிய நாடுகளில், இந்திய பாசுமதி அரிசிக்கான தேவை சிறப்பான அளவில் வளர்ச்சி கண்டதே முக்கிய காரணம் என, தெரிவிக்கப்பட்டுள்ளது.உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் தேவை அதிகரித்துள்ளதையடுத்து, நடப்பாண்டில், ஒரு கிலோ பாசுமதி அரிசியின் கொள்முதல் விலை, 59 ரூபாயாக உயர்ந்துள்ளது. இது, கடந்தாண்டில், 38 ரூபாயாக இருந்தது என, எம்.பி.ஜிண்டால் மேலும் தெரிவித்தார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**அறுவடை நெற்பயிர் கருகும் அபாயம்**

உடுமலை,; உடுமலை அருகே உள்ள அமராவதி அணையில் இருந்து கல்லாபுரம்,ராமகுளம் வாய்க்கால் மூலம் 3500க்கும் மேற்பட்ட நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. வழக்கமாக இப்பகுதியில் 2 போகம் நெல் சாகுபடி நடக்கும். அணையில் போதிய தண்ணீர் இல்லாததால் கடந்த 2 ஆண்டுகளாக நெல் சாகுபடி நடைபெற வில்லை.

கடந்த சில மாதங்களுக்கு முன்பு பெய்த தென்மேற்கு பருவமழையால் அணையில் நீர் நிரம்பியதையடுத்து இப்பகுதியில் 1200 ஏக்கரில் நெல் சாகுபடி செய்யப்பட்டது. தற்போது அறுவடை நடந்து கொண்டிருக்கிறது. இதுவரை 800 ஏக்கரில் அறுவடை முடிந்து விட்டது, மீதி 400 ஏக்கரில் நெல் விளையும் பருவத்தில் உள்ளது.

இந்நிலையில் தற்போது அணையின் நீர்மட்டம் 32 அடியாக குறைந்து விட்ட து. ஆற்றிலும், பிரதாக கால்வாயிலும் தண்ணீர் திறக்கப்பட்டதால் நீர்மட்டம் சரிந்தது. இதனால் கல்லாபுரம், ராமகுளம் வாய்க் காலுக்கு தண்ணீர் வருவது தடைபட்டுள்ளது. அறுவடைக்கு இன்னும் சிறிது நாட்களே உள்ள நிலையில் 400 ஏக்கர் நெற்ப யிரை காக்க கல்லாபும், ராமகுளம் வாய்க்காலுக்கு தண்ணீரை திருப்பி விட வேண்டுமென அதிகாரிகளை விவசாயிகள் வலியுறுத்தி உள்ளனர். இதற்கிடையில் பிரதான கால்வாயில் நேற்று முன்தினம் தண்ணீர் திறப்பு நிறுத்தப்பட்டு விட்டது.

தற்போது அணையின் நீர்மட்டம் 32 அடி, வரவு 323 கனஅடி, வெளியேற்றம்- ஆற்றில் 400 கனஅடி.

**சர்வதேச விவசாய கண்காட்சி மாநகரில் இன்று துவங்குகிறது**

கோவை, : கோவை சிங்காநல்லூர் உழவர் சந்தை அருகில் உள்ள விஜயா கண்காட்சி வளாகத்தில் 3 வது சர்வதேச விவசாயம் மற்றும் தோட்டக்கலை கண்காட்சி இன்று (5ம் தேதி) முதல் 8ம் தேதி வரை 4 நாட்கள் நடைபெறுகிறது. 120க்கும் மேற்பட்ட அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

அதிநவீன வேளாண் இயந்திரங்கள், டிராக்டர் கள், அறுவடை இயந்திரங் கள், உணவுப் பதப்படுத்தும் இயந்திரங்கள், தோட்டக்கலை கருவிகள், அதிக மகசூல் தரும் பயிர் வகை

கள், நீர்ப்பாசன கருவிகள், பூச்சிக் கொல்லி மருந்துகள், ஊட்டச்சத்து மிக்க மாட்டுத் தீவனம், சோளத் தட்டு மற்றும் வைக்கோல் ஆகியவற்றை சேகரிக்கும் பேலர் இயந்திரம், களை எடுக்கும் கருவிகள் உள்ளிட்டவை கண்காட்சி அரங்குகளில் வைக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், தமிழ்நாடு விவசாய இடுபொருள் சங் கம் ஆதரவுடன் நடக்கும் இக்கண்காட்சியில் நாளை (6ம் தேதி) கருத்தரங்கும் 7ம் தேதி தேசிய அளவிலான டீலர்கள் சந்திப்பும் நடைபெற உள்ளது.

அதிக மகசூல், புதிய கண்டுபிடிப்பு, வியக்கத்தக்க வளர்ச்சியடைந்த காய்கனிகள் மற்றும் கால்நடை கள் கொண்டு வரும் விவசாயிகளுக்கு சிறப்பு பரிசு வழங்கப்படும்.

கோவை மாநகரின் முக்கிய இடங்களில் இருந்து கண்காட்சி வளாகத்திற்கு இலவச வேன் வசதி செய்யப்பட்டுள்ளதாக கண்காட்சி ஏற்பாட்டாளர்கள் பாலசுந்தரம், ராமலிங்கம் தெரிவித்தனர்

**கோமாரி நோயால் மாடுகள் உயிரிழப்பு பாதிக்கப்பட்டோருக்கு அரசு நஷ்டஈடு வழங்க வேண்டும் விவசாயிகள் சங்கம் வலியுறுத்தல்**

மணப்பாறை, : தமிழகத்தில் கோமாரி நோயினால் ஏராளமான மாடுகள் உயிரிழந்துள்ளன. இதில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசு உரிய நஷ்டஈடு வழங்க வேண்டும் என்று விவசாயிகள் சங்கம் வலியுறுத்தி உள்ளது.

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் தாலுகா மாநாடு மணப்பாறையில் நடந்தது. தாலுகா தலைவர் தங்கராசு தலைமை வகித்தார். ஆனாம்பட்டி பால் கூட்டுறவு சங்க தலைவர் ராமசாமி, இயக்குநர் ராஜேந்திரன், ஆனாம்பட்டி கடன் கூட்டுறவு சங்க இயக்குநர் கல்யாண சுந்தரம் முத்தப்புடையான்பட்டி கடன் கூட்டுறவு சங்க இயங்குநர் பெருமாள், நல்லு, பழனிச்சாமி, வையம்பட்டி சக்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாநாட்டை தொடங்கி வைத்து மாநில தலைவர் குணசேகரன் எம்.எல்.ஏ.  பேசியதாவது:

மத்திய அரசின் தவறான விவசாய கொள்கையால் விவசாய உற்பத்தி கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் விவசாய தொழிலை விட்டே வெளியேறக்கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளது.

மணப்பாறை ஒன்றிய பகுதிகளில் சிப்காட் மற்றும் காகித ஆலைக்காக சுமார் 2500 ஏக்கர் நிலம் அரசு கையகப்படுத்தப்பட உள்ளது. அரசு தொழில் துறைகளை வளர்க்க வேண்டியது அவசியமே. அதே நேரத்தில் விவசாயம் பாதிக்கப்படக்கூடாது. அரசு விவசாய நிலங்களை பிற பயன்பாட்டிற்கு எடுப்பதை தடை செய்து தரிசு நிலங்களை கையகப்படுத்த வேண்டும். எடுக்கப்படும் நிலங்களுக்கு நான்கு மடங்கு கூடுதலாக நஷ்டஈடு வழங்க வேண்டும். மேலும் நிலம் கொடுப்பவர்களுக்கு வீட்டிற்கு ஒருவருக்கு வேலைவாய்ப்பும் வழங்க வேண்டும்.

கோமாரி நோயால் இறந்த மாடுகள் குறித்து தமிழகம் முழுவதும் முறையான கணக்கீடு எடுத்து மாடுகளை பறிகொடுத்த விவசாயிகளுக்கு முழுஇழப்பீட்டுத் தொகை அரசு வழங்க வேண்டும். கடந்த ஆண்டுபோல இந்த ஆண்டும் வறட்சி நிலை நீடிப்பதால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் குறித்து

திட்டங்களை செய்ய முன்கூட்டியே திட்ட மதிப்பீடுகளையும், நிதி ஆதாரங்களையும் திரட்டுவதற்கான அனைத்து நடவடிக்கைகளை தமிழக அரசு எடுக்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

கடந்த கால வேலை அறிக்கையை தாலுகா செயலாளர் வீரமணி வாசித்தார். மாநில துணை செயலாளர் இந்திரஜித், மாவட்ட செயலாளர் அயிலை சிவசூரியன் மாவட்ட தலைவர் பழனிச்சாமி, தட்சிணாமூர்த்தி, நகர செயலாளர் அருள் ஆரோக்கியம், ஏஐடியுசி போக்குவரத்து கழக மாவட்ட பொது செய லாளர் சுப்பிரமணியன் ஆகியோர் பேசினர்.

மணப்பாறை, மருங்காபுரி, வையம்பட்டி ஒன்றிய பகுதிகளில் கிணறுகளை ஆழப்படுத்த அடிக்கிணறு வெட்ட கூட்டுறவு வேளாண்மை வங்கி மூலம் கடன் வசதி அளிக்க வேண்டும், கால்நடைகளுக்கு மானிய விலையில் தீவனங்களும் பசும்பால் லிட்டருக்கு ரூ.25ம், எருமைபாலுக்கு ரூ.35ம் வழங்க வேண்டும உள்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**தொடர் சாரல் மழை துவாக்குடி மலையில் 14 மிமீ பதிவு**

திருச்சி, : திருச்சி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் பரவலாக நேற்று தொடர்ந்து சாரல் மழை பெய்தது. துவாக்குடி மலையில் மட்டும் 14 மிமீ அளவுக்கு மழை பெய்துள்ளது.

திருச்சி மாவட்டத்தில், பரவலாக பல்வேறு இடங்களில் பகல் மற்றும் இரவு நேரங்களில் தொடர்ந்து மனதுக்கு இதமளிக்கும் குளுகுளு தென்றலுடன் கூடிய சாரல் மழை பெய்து வருகிறது. இம் மாவட்டம் முழுவதும் மொத்தம் 21.70 மிமீ அளவுக்கு மழை பெய்துள்ளது. இது சராசரியாக 0.87 மிமீ ஆகும். துவாக்குடி மலையில் அதிகபட்சமாக 14 மிமீ பதிவாகியுள்ளது. நேற்று காலை 8 மணியுடன் முடிவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் பெய்த மழை அளவு விவரம் (மி.மீட்டரில்): ஏர்போர்ட் 1.80, நந்தியார் தலைப்பு 2, கல்லக்குடி 2.10, பொன்மலை 1.80, துவாக்குடி மலை 14.

**காரைக்கால் மாவட்ட விவசாயிகளுக்கு விரைவில் நிவாரணம்**

காரைக்கால், : காரைக்கால் நகரமைப்புகுழு தலைவர் கோவிந்தராஜ் கூறியதாவது:

காவிரி நீர்வரத்து மற்றும் மழை இல்லாத காரணத்தால், காரைக்கால் மாவட்டத்தில் சம்பா விளைச்சல் குறைந்துள்ளது. அண்டை மாநிலமான தமிழகத்திலும் இதே நிலைதான். தமிழக அரசு விவசாயிகளுக்கு வழங்கி வரும் நிவாரணத்தை சுட்டிக்காட்டி, காரைக்கால் மாவட்ட விவசாயிகளுக்கும் நிவாரணம் வழங்கவேண்டுமென, புதுவை முதல்வரை நேரில் சந்தித்து வலியுறுத்தினோம். காரைக்கால் மாவட்ட விவசாயிகள் மீது அக்கறை கொண்டுள்ள முதல்வர் ரங்கசாமி, வேளாண்துறை அதிகாரிகளுடன் கலந்துபேசி, மிக விரைவில் நிவாரணம் வழங்க எற்பாடு செய்வதாக உறுதி அளித்துள்ளார். அதன்படி, காரைக்கால் விவசாயிகளுக்கு விரைவில் நிவாரணம் கிடைக்கும்.

மேலும், என்ஆர் காங்கிரஸ் எம்எல்ஏக்கள் 15 பேரில் 10 பேர் விரைவில் காங்கிரஸ் கட்சியில் இணைய போவதாக, கண்ணன் எம்பி அண்மையில் கூறியிருந்தார். அண்மைக்காலமாக, மக்களை குழப்புவதே காங்கிரஸ் கட்சியின் வேலையாக போய்விட்டது. என்ஆர் காங்கிரஸ் எம்எல்ஏக்கள் முதல்வர் ரங்கசாமி தலைமையில் கட்டுப்கோப்புடன் உள்ளனர். 10 இல்லை ஒருவர் கூட காங்கிரஸ் கட்சியில் இணையும் எண்ணம் இல்லை. வருகிற தேர்தலை நினைத்து காங்கிரஸ் கட்சிக்கு இப்போதே பயம் வந்துவிட்டது போலும். அதனால்தான் வலுவிழந்த காங்கிரஸ் கட்சிக்கு ஆள் சேர்க்க அலைகின்றனர். இவர்களின் பேச்சால் என்ஆர் காங்கிரஸ் மேலும் வலுப் பெறுமே தவிர வீழாது என்றார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**திருவெறும்பூரில் கோமாரி நோயை கட்டுப்படுத்த கோரி தே.மு.தி.க.வினர் ஆர்ப்பாட்டம் செந்தில்குமார் எம்.எல்.ஏ. தலைமையில் நடந்தது**

திருவெறும்பூர்,கோமாரி நோயை கட்டுப்படுத்த கோரி திருவெறும்பூரில் செந்தில்குமார் எம்.எல்.ஏ. தலைமையில் தே.மு.தி.க.வினர் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

<u>தே.மு.தி.க. ஆர்ப்பாட்டம்</u>

கோமாரி நோயை கட்டுப்படுத்த தவறிய தமிழக அரசை கண்டித்துதிருவெறும்பூர் ஊராட்சிஒன்றிய அலுவலகம் முன் நேற்று காலை தே.மு.தி.க.வினர் ஆர்ப்பாட்டம் நடத்தினர். ஆர்ப்பாட்டத்துக்கு தே.மு.தி.க திருச்சி தெற்கு மாவட்ட செயலாளர் செந்தில்குமார் தலைமை தாங்கினார். ஆர்ப்பாட்டத்தில் செந்தில்குமார் எம்.எல்.ஏ பேசியதாவது:–

திருவெறும்பூர் ஒன்றிய பகுதியில் கோமாரி நோய் தாக்கி பழங்கனான்குடியில் 38 கறவை மாடுகள், 10 கன்று குட்டிகள், 42 ஆடுகள் இறந்திருக்கின்றன.

அதேபோல சூரியூர்ஊராட்சி, காந்தலூர்ஊராட்சி, அசூர்ஊராட்சி, கூத்தைப்பார் பேரூராட்சி பகுதிகளிலும் கோமாரி நோய் தாக்கி கால்நடைகள் இறந்திருக்கின்றன.

நிவாரணம் வழங்க வேண்டும்

இறந்துபோன கால்நடைகளுக்கு உரிய நிவாரணத்தை உடனடியாக ஒரு குழு அமைத்து விவசாயிகளையும் அவர்கள் தெய்வமாக மதிக்கும் கால்நடைகளையும் காப்பாற்ற வேண்டும். பாலுக்கு வழியின்றி தவிக்கும் குழந்தைகளுக்கு அம்மாவாக விளங்கும் கறவை மாடுகளை காப்பாற்ற போர்க்கால அடிப்படையில் அரசு துறைகள் இயக்கப்பட வேண்டும்.

சட்டசபையில் எத்தனையோ முறை பேசியும் திருவெறும்பூர் பகுதியில் அணுகுசாலை அமைக்கப்படவில்லை.திருவெறும்பூர் கடைவீதியில் உள்ள ராமலிங்கம் காலனி, பெரியசாமி காலனி, குருநாதன் காலனி உள்ளிட்ட இடங்களில் மக்கள் பயன்படுத்தும் கழிவு நீர் வெளியேற்றப்படாமல் கொசுக்களின் சரணாலயமாக அந்த இடங்கள் மாறிப்போனதால் மக்கள் படும் அவதிக்கு அளவே இல்லை. இந்நிலையை அரசும், அரசு அதிகாரிகளும் விரைவில் மாற்ற வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

கட்சி நிர்வாகிகள்

கூட்டத்தில் மாவட்ட கழக அவைத்தலைவர் வழக்கறிஞர் கிருஷ்ணகோபால், மாவட்ட கழக பொருளாளர் பாரதிதாசன், மாவட்ட துணை செயலாளர் மகாமுனி, பொதுக்குழு உறுப்பினர் திருமுருகன், ஒன்றியக்குழு துணைத்தலைவர் சூரியூர்சக்தி, முகேஷ், ஒன்றிய துணை செயலாளர்கள் நடராசன், முருகேசன், நாகராஜன், அழகர், துவாக்குடிநகரச்செயலாளர் சிங்காரவேல், மாணவரணி செயலாளர் கூந்தைமுத்துக்குமார், நவநீதன், சையதுமுஸ்தபா, மகளிரணி மாலதி, மேகலா உள்பட பலர் கலந்து கொண்டனர்.

முன்னதாக ஒன்றிய செயலாளர் பால்ராஜ் வரவேற்றார். முடிவில் கூத்தைப்பார் பேரூர் கழக செயலாளர் சரவணன் நன்றி கூறினார்.

**புளியங்குடியில் காட்டு யானைகள் அட்டகாசம் 3 ஏக்கர் நெற்பயிர்கள் சேதம்**



நெல்லை

புளியங்குடியில் நெல் வயலுக்குள் புகுந்து காட்டு யானைகள் அட்டகாசம் செய்தன. இதில் சுமார் 3 ஏக்கர் நெற்பயிர்கள் நாசம் அடைந்து உள்ளன.

நெல் சாகுபடி

நெல்லை மாவட்டம் புளியங்குடியைச் சேர்ந்த சிந்தாமணி அம்பேத்கார் 4–ம் தெருவைச் சேர்ந்தவர் ராமர். விவசாயி. இவருக்கு கோட்டமலை பீட் பகுதியில் உள்ள காடுவெட்டி பரும்பின் அடிவாரத்தில் விவசாய நிலம் உள்ளது. அந்த நிலத்தில் தற்போது நெற்பயிர் சாகுபடி செய்துள்ளார். தற்போது பயிர்கள் நல்ல வளர்ச்சி பெற்று கதிர் வெளியே வரும் பருவத்தில் உள்ளது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு அவரது வயலுக்குள் புகுந்த காட்டு யானைகள் அப்பகுதியில் பயிரிடப்பட்டிருந்த சுமார் 3 ஏக்கர் நெற் பயிரை முழுவதுமாக பிடுங்கி நாசம் செய்துள்ளன. நேற்று காலையில் அவர் வந்து பார்த்தபோது தனது வயலில் நெற்பயிர்கள் யானைகளால் சேதப்படுத்தியிருப்பது கண்டு அதிர்ச்சி அடைந்தார்.

விவசாயிகள் பேட்டி இதுகுறித்து அந்த பகுதி விவசாயிகள் கூறியதாவது:–

இந்தபகுதியில் போதிய அளவு பருவமழை இல்லை. ஆனாலும் மழை பெய்யும் என்ற நம்பிக்கையில் நடவுக்காக நெல் நாற்றுக்களை வளர்த்தோம். ஆனால் தொடர்ந்து பருவ மழை பொய்த்த நிலையில் நெல் நாற்றுக்கள் முழு வளர்ச்சியடைந்த நிலையில் கிணறுகளில் தண்ணீரின் அளவும் குறைந்து விட்டது.

இந்தநிலையில் மின்தடை காரணமாகவும், பணியாளர்கள் பற்றாக்குறையிலும், கூலி உயர்வு உள்ளிட்ட பல்வேறு பிரச்சனைகளுக்கு மத்தியில் விவசாயம் செய்து வருகின்றோம்.இரவு பகல் பாராது வயல்வெளிகளிலே முகாமிட்டு நெல் பயிர்களை நடவு செய்து வளர்த்து வருகின்றோம். இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு சுமார் 10மணியளவில் காட்டு யானை ஒன்று பயங்கர சப்தத்துடன் பிளிறியது. இதனையடுத்து நாங்கள் டார்ச் லைட் அடித்து பார்த்த போது ஒன்றும் தெரியவில்லை.தொடர்ந்து இரவு நேரத்தில் கடும் பனி இருந்ததால் தங்களது நெல் வயல்களில் இருக்கும் குடிசைகளில் தங்கி விட்டோம்.தொடர்ந்து காலையில் எழுந்து வந்து பார்த்தபோது நெல் நடவு செய்யப்பட்ட வயல்களில் சுமார் 3ஏக்கர் நெல்பயிர்களை யானைகள் சேதப்படுத்தி இருப்பது தெரியவந்தது. தொடர்ந்து வயல்பகுதியை சுற்றி பார்த்தபோது வனப்பகுதியை விட்டு செயலிழந்த சோலார் மின் வேலிகளின் கம்பிகளை தாண்டி சுமார் பத்திற்கும் மேற்பட்ட காட்டு யானைகள் குட்டிகளுடன் வந்து நெல் பயிர்களை சேதப்படுத்தி இருப்பது தெரியவந்தது.மேலும் வயல்பகுதிக்கு அருகில் புதியதாக நிலத்தை சீர் செய்து கரைகள் அமைத்துள்ளனர் அந்த கரைகளில் யானை குட்டிகள் படுத்து உருண்டு கரைகளை சேதப்படுத்தியும் நில அளவைக் கற்களை பிடுங்கி வீசியுள்ளன. ஏற்கெனவே கடந்த காலங்களாக நெல்பயிர்கள் பாலடைக்கும் நேரங்களில் அதன் சுவைக்கு அடிமையாகி காட்டுயானைகள் நெல் பயிர்களை சேதப்படுத்துவது வழக்கம். அதுபோல தற்போதும் காட்டு யானைகள் நெல் பயிர்களை சேதப்படுத்த தொடங்கி விட்டன..

எனவே பழுதடைந்த சோலார் மின்வேலிகளை உடனடியாக சீர் செய்யவேண்டும். சேதமடைந்த பயிர்களுக்கு இழப்பீடு வழங்கவேண்டும். மேலும் அப்பகுதியில் உள்ள காடுவெட்டி பரும்பின் உச்சியில் வனத்துறையினர் சார்பில் கண்காணிப்பு கோபுர கட்டிடம் ஒன்று பல ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டது. அதனை இன்று வரை பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டும்..

மேலும் பட்டாசுகள் மட்டுமே வனத்துறையினர் கொடுத்து யானைகள் வருவது தெரிந்தால் பட்டாசுகளை வெடிக்கச் செய்யுங்கள் என கூறுகின்றனர். இந்த

நிலையில் தற்போது அந்த பட்டாசு சப்தம் கேட்டாலும் யானை பயந்து செல்வதில்லை.. மேலும் அப்பகுதி விவசாயிகள் மீண்டும் தங்களது வயல்பகுதிக்கு யானைகள் வரும் என எண்ணி குழுக்களாக தொடர்ந்து இரவு நேரங்களில் வயல்களில் முகாமிட முடிவு செய்துள்ளோம். எனவே இப் பிரச்சனைக்கு தீர்வுகாண சம்பவ இடங்களை மாவட்ட கலெக்டர் நேரில் ஆய்வு செய்து சேதமடைந்த பயிர்களுக்கும் இழப்பீட்டுத் தொகை வழங்குவதுடன் விவசாயிகளையும், விவசாயத்தையும் பாதுகாக்கவேண்டும்.இவ்வாறு அப்பகுதி விவசாயிகள் கூறினர்.

**நெல்லை மாவட்டத்தில் உள்ள பாபநாசம் அணையின் நீர்மட்டம் 100 அடியை தாண்டியது**



நெல்லை

நெல்லை மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக பரவலாக மழை பெய்து வருகிறது. இதனால் அணைகளில் நீர்மட்டம் உயர்ந்தது.

நேற்று பாபநாசம் அணை நீர்மட்டம் 98.50 அடியாக இருந்தது. நேற்று நீர்மட்டம் 100 அடி ஆனது. அணைக்கு வினாடிக்கு 1168 கனஅடி நீர் வந்தது.

இதேபோல் மணிமுத்தாறு அணை நீர்மட்டம் நேற்று 72.80 அடி ஆக இருந்தது. நேற்று நீர்மட்டம் 73.30 அடியாக உயர்ந்தது. அணைக்கு வினாடிக்கு 366 கனஅடி நீர் வந்தது.

**சென்னையில் இன்று...**

**வானம் மேகமூட்டத்துடன் காணப்படும்.**



நகரின் ஒரு சில இடங்களில் மழை பெய்ய வாய்ப்பு.

காலை 10 மணி– தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கார் இளைஞர் பேரவை சார்பில் அம்பேத்காரின் 57–வது நினைவு தினம். இடம்– பவர் ஹவுஸ், கோடம்பாக்கம்.

காலை 10 மணி– விஜயா வங்கியின் கிளை தொடக்க விழா. இடம்– பெரிய மாணியக்கார சாலை, செங்கல்பட்டு. தொடங்கி வைப்பவர்– அமெட் பல்கலைக்கழகத்தின் அறங்காவலர் எஸ்.கரிகாலன்.

காலை 10 மணி– குரு ஸ்ரீ சாந்திவிஜய் ஜெயின் மகளிர் கல்லூரியில் இறுதி ஆண்டு மாணவிகளுக்கான வளாக நேர்காணல். இடம்– கல்லூரி வளாகம், வேப்பேரி.

பிற்பகல் 3 மணி– சஷன் ஜெயின் பெண்கள் கல்லூரியில் ‘பெண்களுக்கு எதிரான கொடுமைகளை தடுத்தல்’ தலைப்பில் ஒருநாள் கருத்தரங்கம். இடம்– கல்லூரி வளாகம், தியாகராயநகர்.பிற்பகல் 3 மணி– மனிதநேய மக்கள் முன்னேற்ற கழகம் சார்பில் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம். இடம்– சென்னை கலெக்டர் அலுவலகம் அருகில்.மாலை 4 மணி– முத்ரா சபையின் 19–வது கலைத்திருவிழா. இடம்– ராமகிருஷ்ணா மிஷன் பள்ளி, தியாகராயநகர்.மாலை 6 மணி– காந்தி நிறுவிய ஹரிஜன் சேவாக் சங்கத்தின் தமிழ்நாடு கிளையின் சார்பில் சத்திய சோதனை புத்தகம் வாசிப்பு நிகழ்ச்சி. வாசிப்பவர்– மாணவி ஆர்.அருள்பிரியா. இடம்– எஸ்.ஆர்.எஸ். சர்வோதயா மகளிர் விடுதி, சேத்துப்பட்டு.மாலை 6 மணி– இந்திராநகர் ஐயப்ப பக்த ஜன சபா சார்பில் 35–வது ஆண்டு திருவிளக்கு திருவிழா. இடம்– இந்திராநகர், அடையார்.மாலை 6.30 மணி– தமிழக மூதறிஞர்

குழு சார்பில் ‘மதசார்பின்மைக்கு எதிரான அறைக்கூவல்கள்’ தலைப்பில் சொற்பொழிவு. இடம்– நடிகவேள் எம்.ஆர்.ராதா மன்றம், பெரியார் திடல், வேப்பேரி. சிறப்புரை– மணி சங்கர அய்யர். நிறைவுரை– திராவிட கழக தலைவர் கி.வீரமணி.

நாளைய மின்தடை

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் மின்வாரிய பராமரிப்பு பணி காரணமாக கீழ்க்கண்ட இடங்களில் நாளை (சனிக்கிழமை) காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை மின்தடை ஏற்படும்.

பெரியார்நகர் பகுதி:

ஜி.கே.எம் காலனி முழுவதும் – அன்னை அச்சுகம் நகர், சித்தரச்சன் காலனி, வெங்கட்ராமன் சாலை, பெரியார் நகர், பேப்பர் மில்ஸ் ரோடு மற்றும் எஸ்.ஆர்.பி.காலனி – ஜெகநாதன் சாலை, ஜவகர்நகர், கே.சி.கார்டன், எஸ்.ஆர்.பி.காலனி மற்றும் கோயில் தெரு தெற்கு மற்றும் வடக்கு, லக்ஷ்மணன்நகர் கிழக்கு மற்றும் மேற்கு, ராம்நகர், ராஜா தோட்டம், பேப்பர் மில்ஸ் ரோடு, 70 அடி ரோடு, ராமமூர்த்திநகர், வெற்றிநகர், வேலன்நகர், குப்புசாமி தெரு, சிவபிரகாசம் தெரு, அண்ணா சிலை, மற்றும் கொளத்தூர், லட்சுமிபுரம் மற்றும் பூம்புகார்நகர் – பூம்புகார்நகர், வசந்தம்நகர், அர்ஜுன்நகர், அமராஜ்நகர், அம்பேத்கார்நகர், தென்பழனிநகர், தன்ராஜ்புரம், சுப்ரமணியபுரம், வெங்கடேஷ்வரா நகர், லட்சுமிநகர், கண்ணகிநகர், ஜெயராம்நகர், சிவசக்திநகர், ரெட்ஹில்ஸ் ரோடு, டி.நகர் காலனி, சக்திவேல்நகர், தட்சணாமூர்த்திநகர், சக்தி வினாயகர் கோயில் தெரு, லட்சுமிபுரம், டீச்சர்ஸ் காலனி, சாரதி நகர், வில்லிவாக்கம் ரோடு, கணேஷ்நகர், கடப்பா ரோடு, ஆர்பர் காலனி, செல்வம்நகர், ஜெயந்திநகர், வீனஸ்நகர், அன்னை பராசத்தி நகர், வ.உ.சி. தெரு, நேதாஜிநகர், கங்கையம்மன் கோயில் தெரு, பஜனை கோயில் தெரு, சூரபட்டு ரோடு, பெரியார்நகர் மற்றும் ஜவஹர்நகர் – பெரியார்நகர், ஜி.கே.எம்.காலனி, பேப்பர்

மில்ஸ் ரோடு, ஜானகி ராமன் ரெட்டி காலனி, ஸ்ரீனிவாசன்நகர், ரெட்ஹில்ஸ் ரோடு, வி.வி.நகர், அச்சுகம்நகர் 1–12வது தெரு, சம்தியா காலனி 1–5வது தெரு, கிரிஜாநகர் கிழக்கு, வெற்றிவேல்நகர், சரோஜினிநகர், எம்.என்.நகர், கிழக்குமடா வீதி சன்னதி தெரு, பள்ளி சாலை, கங்கையம்மன் கோவில் தெரு, கே.எஸ்.நகர், கொளத்தூர் – கொளத்தூர் முழுவதும், வசந்தம்நகர், பூம்புகார்நகர், அர்ஜுன்நகர், காமராஜ் தெரு, அம்பேத்கார்நகர், தென்பழனிநகர், தம்ராஜ்புரம், சுப்ரமணியபுரம், வெங்கடேஷ்வராநகர், லட்சுமிநகர், கண்ணகிநகர், ஜெயராம்நகர், சிவசக்திநகர், வி.வி.நகர்– ஜானகி ராமன்ரெட்டி காலனி, நேதாஜிநகர், ஸ்ரீனிவாசன் நகர், ரெட்ஹில்ஸ் நகர், வி.வி.நகர், ராஜாஜிநகர்.

ஸ்பர்டேங்க் சாலை பகுதி:


எழும்பூர் நெடுஞ்சாலை, காந்தி இர்வின் சாலை, எழும்பூர், மான்டியத் சாலை மற்றும் சந்து, பாந்தியன் சாலை முழுவதும், சத்தியமூர்த்தி சாலை, பூவிருந்தவல்லி நெடுஞ்சாலை ஒரு பகுதி, காசாமேஜர் சாலை, ஹால்ஸ் சாலை, சேட் காலனி, பாந்தியன் சந்து, ஸ்பர்டேங்க் சாலை, எம்.எஸ்.நகர், எத்திராஜ் சாலை மற்றும் சந்து. ராமாபுரம் பகுதி:

பாரதி சாலை, வள்ளுவர் சாலை, சத்யாநகர், சபரிநகர், முகலிவாக்கம், ராமாபுரம், வெங்கடேஸ்வரா நகர், மணப்பாக்கம், பூந்தமல்லி நெடுஞ்சாலை, நெசப்பாக்கம், ஜெயபாலாஜி நகர், வெங்கட்ராமன் சாலை, சூளைபள்ளம் (எம்.ஜி.ஆர். நகர்), பூத்தபேடு. லஸ் பகுதி:

லஸ் பகுதி, ராயப்பேட்டை நெடுஞ்சாலை, கட்சேரி சாலை, மந்தைவெளி ஒரு பகுதி, சி.வி ராமன் சாலை, கற்பகாம்பாள் நகர், சி.ஐ.டி காலனி, காட்டு கோவில், தேசிகா சாலை, முன்டகன்னியம்மன் கோவில் தெரு, லோகநாதன் காலனி, சி.பி. ராமசாமி சாலை, தேவடி தெரு, கிழக்கு அபிராமபுரம், ஆலிவர் சாலை, விஸ்வேசபுரம் மயிலாப்பூர் ஒரு பகுதி. டி.எச்.ரோடு பகுதி:

டி.எச்.ரோடு, ஜி.ஏ.ரோடு, சோலையப்பன் தெரு, சஞ்ஜீவிராயன் கோவில் தெரு, கப்பல் போலு தெரு, தாண்டவராயன் கிராமணி தெரு மற்றும் முதலி தெரு, பாலு முதலி தெரு, வி.பி.கோவில் தெரு, ராமனுஜ ஐயர் தெரு, ஆர்.கே.நகர், தண்டையார்பேட்டை, பழைய வண்ணாரப்பேட்டை, அவதான இராமசாமி தெரு, சுப்புராயலு தெரு, கோதண்டராமன் தெரு, ஸ்ரீரங்கம்மாள் தெரு.

**குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி அதே இடத்தில் நீடிக்கிறது; கடலோர மாவட்டங்களில் நாளை அநேக இடங்களில் மழை பெய்யும்**




வடகிழக்கு பருவமழை

சென்னை

குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி அதே இடத்தில் நீடிக்கிறது. அதன்காரணமாக இன்று அநேக இடங்களில் மழை பெய்யும் என்று வானிலை மைய இயக்குனர் எஸ்.ஆர்.ரமணன் தெரிவித்தார்.

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை பெய்துவருகிறது. வடகிழக்கு பருவமழை காலத்தில் தமிழ்நாட்டில் சராசரியாக பெய்யவேண்டிய மழை 43 செ.மீ. வடகிழக்கு பருவமழை காலம் இந்த மாதம் முடிய உள்ளது. ஆனால் இந்த ஆண்டு வடகிழக்கு பருவ மழை காலத்தில் இதுவரை 27 செ.மீ. மழை மட்டுமே பெய்துள்ளது. இன்னும் மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

இந்த நிலையில் இலங்கை அருகே தென்மேற்கு வங்கக்கடலில் கடந்த சில நாட்களுக்கு முன்பாக குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகி வலுப்பெற்று குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதியாக மாறி உள்ளது.

இதுகுறித்து சென்னை வானிலை மண்டல ஆராய்ச்சி இயக்குனர் எஸ்.ஆர்.ரமணன் கூறியதாவது:

<u>அதே இடத்தில் தாழ்வுப்பகுதி</u>

கடந்த சில நாட்களாக தென்மேற்கு வங்கக்கடலில் நிலைகொண்டுள்ள குறைந்த காற்றழுத்த தீவிர தாழ்வுப்பகுதி அதே இடத்தில் நிலை கொண்டுள்ளது. அது காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மாறாமல் அப்படியே இருக்கிறது. அதற்குக் காரணம் அதன் மேல் அடுக்கில் காற்று முறிவு இருப்பதுதான்.

குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி வடக்கு நோக்கி நகரும் என்று கணினி வழி தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவ்வாறு வடக்கு நோக்கி நகர்ந்தால் தமிழ்நாட்டுக்கு மழையை எதிர்பார்க்கமுடியாது. அது மியான்மரை நோக்கிக்கூட செல்லலாம். அது குறித்து இப்போது எதுவும் கூற இயலாது.

<u>நாளை அநேக இடங்களில் மழை பெய்யும்</u>

நாளை(வெள்ளிக்கிழமை) தமிழ்நாட்டில் கடலோர மாவட்டங்களில் அநேக இடங்களில் மழை பெய்யும். சில இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்பு உண்டு. உள்மாவட்டங்களில் சில இடங்களில் மழை பெய்யும். இவ்வாறு எஸ்.ஆர்.ரமணன் தெரிவித்தார்.

**திருந்திய நெல்சாகுபடி வயல்களில் இணை இயக்குனர் ஆய்வு**



வெம்பாக்கம் வட்டாரத்தில் பயிரிடப்பட்டுள்ள திருந்திய நெல் சாகுபடி, துவரை நாற்றங்காலை இணை இயக்குனர் பன்னீர் செல்வம் ஆய்வு செய்தார்.

**இணை இயக்குனர் ஆய்வு**

திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு தாலுகா வெம்பாக்கம் வட்டாரத்தில் அமைக்கப்பட்டுள்ள திருந்திய நெல் சாகுபடி, துவரை நாற்றங்கால் மற்றும் பண்ணை குட்டைகள் அமைக்கப்பட்டுள்ளது.

அவைகளை வேளாண்மை இணை இயக்குனர் எம்.பன்னீர்செல்வம் பார்வையிட்டு ஆய்வு செய்தார். வடமணப்பாக்கம், மேல்பூதேரி கிராமங்களில் அமைக்கப்பட்டுள்ள 10 எக்டர் பரப்பளவில் கோ.ஆர்.ஜி. 7ரகம் துவரை நாற்றங்கால், மற்றும் 50எக்டர் பரப்பளவில் திருந்திய நெல் சாகுபடிகளையும் பார்வையிட்டார்.

**பண்ணைக்குட்டை**

அப்போது பண்ணைக்குட்டை மேலாண்மை குறித்து விவசாயிகளுக்கு விளக்கம் அளித்தார். ஆய்வின்போது வேளாண்மை உதவி இயக்குனர்கள் ஜி.பாண்டியன், ஏழுமலை, செல்வராஜ், வேளாண்மை அலுவலர் குமரன், தொழில்நுட்ப மேலாளர் சிவசங்கர், வேளாண்மை உதவி அலுவலர்கள் தங்கராசு, அண்ணாமலை, நடராசன் ஆகியோர் உடனிருந்தனர்.

**தாராபுரம் கோட்டத்தில் விவசாய மின் இணைப்பு கேட்டு 6 ஆயிரம் விண்ணப்பங்கள்**

தாராபுரம்,



உழவர் உழைப்பாளர் கட்சி மாவட்ட செயலாளர் ஈஸ்வரமூர்த்தி தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் விவசாய மின்இணைப்பு கேட்டு எத்தனை விண்ணப்பங்கள் வந்து உள்ளன என்று கேட்டிருந்தார். அதற்கு தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் பதில் அனுப்பி உள்ளது.

அதில் கூறப்பட்டு இருப்பதாவது:–

தாராபுரம் கோட்டத்தில் விவசாய மின் இணைப்பு கேட்டு 5,993 விண்ணப்பங்கள் வந்து உள்ளன. சுயநிதி மின் இணைப்பு திட்டத்தின்படி ரூ.50 ஆயிரம் திட்டத்தில் விண்ணப்பித்துள்ள விண்ணப்பங்கள் எண்ணிக்கை 3,232. சுயநிதி திட்டம் ரூ.25 ஆயிரம் வரிசையில் 1,524 விண்ணப்பங்களும், ரூ.10 ஆயிரம் திட்டத்தில் 35 விண்ணப்பங்களும் நிலுவையில் உள்ளன. சாதாரண வரிசையில் 1202 விண்ணப் பங்கள் உள்ளது. சாதாரண வரிசையில் தயார்நிலை பதிவு செய்து மின்இணைப்புக்காக காத்திருக்கும் விவசாயிகள் 896.

தயார் நிலை பதிவு செய்த விண்ணப்பதாரர்களில் 1.4.2013 முதல் இன்று வரை 89 மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. சுயநிதி திட்டத்தில் பதிவு செய்த விண்ணப்பங்களில் ரூ.50 ஆயிரம் வரிசையில் 2005–ம் ஆண்டு வரையிலும், ரூ.25 ஆயிரம் வரிசையில் 2003–ம் ஆண்டு வரையிலும் முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு சாதாரண வரிசையில் 530 விண்ணப்பங்களும், சுயநிதி திட்டம் ரூ.50 ஆயிரம் வரிசையில் 291 விண்ணப்பங்களுக்கு, சுயநிதி திட்டம் ரூ.25 ஆயிரம் வரிசையில் ஒரு விண்ணப்பம், ரூ.10 ஆயிரம் வரிசையில் 32 விண்ணப்பங்களும் மின் இணைப்பு வழங்க அரசு நிர்ணயம் செய்துள்ளது.

**தஞ்சை மாவட்ட கரும்பு விவசாயிகளுக்கு எக்டேருக்கு ரூ.30 ஆயிரம் மதிப்பில் இடுபொருட்கள் கலெக்டர் சுப்பையன் தகவல்**



தஞ்சாவூர்,

தஞ்சை மாவட்ட கரும்பு விவசாயிகளுக்கு எக்டேருக்கு ரூ.30 ஆயிரம் மதிப்பில் இடுபொருட்கள் வழங்கப்பட உள்ளது என்று கலெக்டர் சுப்பையன் கூறி உள்ளார்

.

கரும்பு விவசாயிகள்

தஞ்சை மாவட்ட கலெக்டர் சுப்பையன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

தஞ்சை மாவட்டத்தில் தீவிர கரும்பு சாகுபடி திட்டத்தின் கீழ் கரும்பு சாகுபடி செய்து நுண்ணீர்ப்பாசனம் அமைக்கும் விவசாயிகளுக்கு 1 எக்டேருக்கு ரூ.30 ஆயிரம் மதிப்பிலான திரவ உரங்கள் மற்றும் இருபொருட்கள் வழங்கப்பட உள்ளது.

எனவே தீவிர கரும்பு சாகுபடி முறையில் பருக்கரணைகளை சரியான இடைவெளியில் நடவு செய்ய வேண்டும். இதற்கு தேவையான பருக்கரணைகள் அந்தந்தபகுதி சர்க்கரை ஆலை மூலம் வழங்கப்படும். இந்த திட்டம் குருங்குளம் அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை, திருமண்டங்குடி திருஆரூரான் சர்க்கரை ஆலை, துகிலி அம்பிகா சர்க்கரை ஆலை, தலைஞாயிறு நடிப்பிசை புலவர் சர்க்கரை ஆலை அறந்தாங்கி ஈ.ஐ.டி. சர்க்கரை ஆலை ஆகிய சர்க்கரை ஆலைகள் மற்றும் வேளாண்மைத்துறை மூலம் செயல்படுத்தப்படும்.

மானியம் பெறலாம்

கரும்பு சாகுபடிக்கு நுண்ணீர்ப்பாசனம் அமைத்திட தங்கள் பகுதி சர்க்கரை ஆலையின் கரும்பு அலுவலர்கள் அல்லது வேளாண்மை அலுவலர்களை தொடர்பு கொண்டு தேசிய தோட்டக்கலை முகமையின் மூலம் மானியம் பெறலாம். சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவீத மானியம், இதர விவசாயிகளுக்கு 75 சதவீத மானியமும் வழங்கப்படுகிறது. மேலும் விவரங்களுக்கு தங்கள் பகுதி வேளாண்மை உதவி இயக்குனர்கள் அல்லது கரும்பு அலுவலர்களை தொடர்பு கொள்ளலாம்.

இவ்வாறு அவர் அதில் கூறி உள்ளார்.

**வங்கக் கடலில் காற்றழுத்த தாழ்வு நிலை நீடிப்பதால் திருவாரூர் மாவட்டத்தில் 5 நாட்களாக தொடர்ந்து மழை வயல்களில் தேங்கிய நீரை அப்புறப்படுத்தும் பணிகள் தீவிரம்**



திருவாரூர்,

வங்கக் கடலில் உருவாகி உள்ள காற்றழுத்த தாழ்வு நிலை நீடிப்பதால் திருவாரூர் மாவட்டத்தில் தொடர்ந்து 5 நாட்களாக மழை பெய்தது.

இதன்காரணமாக வயல்களில் தேங்கிய நீரை அப்புறப்படுத்தும் பணிகளில் விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார்கள்.

காற்றழுத்த தாழ்வு நிலை

திருவாரூர் மாவட்டத்தில் இந்த ஆண்டு (2013) நவம்பர் மாதம் முடியும் வரையிலும் வடகிழக்குப்பருவ மழை தீவிரம் அடையவில்லை. டிசம்பர் மாதம் பிறந்தது முதல் மாவட்டத்தில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. வங்க கடலில் இந்த மாத தொடக்கத்தில் தமிழகத்திற்கு அருகே குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவானது.அந்த குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை தொடர்ந்து நீடிப்பதால் கடந்த 1–ந் தேதி முதல் திருவாரூர் மாவட்டம் முழுவதும் வடகிழக்குப்பருவ மழை பெய்தது.

<u>விவசாய பணிகள் தீவிரம்</u> கடந்த 5 நாட்களாக பெய்துவரும் இந்த மழையால் காவிரி டெல்டா கடை மடை பகுதி விசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இந்த மழை சம்பா நெற் பயிர்களுக்கு ஏற்றதாகவும் கருதப்படுகிறது.

தொடர் மழை காரணமாக திருவாரூர் அருகே கொட்டாரக்குடி, மேலஅனக்குடி, கமலாபுரம், புதுப்பத்தூர் உள்ளிட்ட கிராமங்களில் சில வயல்களில் சம்பா பயிர்கள் சாய்ந்து சேதம் அடைந்து இருந்தன. சில வயல்களில் தண்ணீர் தேங்கி நின்றது. அந்த வயல்களில் தேங்கிய தண்ணீரை வெளியேற்றும் பணிகளில் விவசாயிகள் தற்போது ஈடுபட்டு வருகிறார்கள்.

<u>கடல் சீற்றம் தணிந்தது</u>

முத்துப்பேட்டை கடல் பகுதிகளில் கடந்த 4–ந் தி, 5–ந் தேதிகளில் அலை சீற்றம் அதிகமாக இருந்தது. இதன்காரணமாக அந்த பகுதிகளைச் சேர்ந்த பைபர் படகு மீனவர்கள் 3 ஆயிரம் பேர் கடலுக்கு மீன்பிடிக்கச் செல்லவில்லை. தொடர்ந்து 2 நாட்கள் முத்துப்பேட்டை மீனவர்கள் கடலுக்குச் செல்லாமல் இருந்தனர். இந்த நிலையில் அலை சீற்றம் தணிந்ததால் முத்துப்பேட்டை மீனவர்கள் நேற்று கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றனர்.

தொடர் மழை காரணமாக நேற்றுமுன்தினம் திருவாரூர் மாவட்ட பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை விடப்பட்டது. மழை தொடர்ந்து பெய்ததால் நேற்று மாவட்டத்தில் உள்ள பள்ளிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டது. நேற்று காலை தான் விடுமுறை அறிவிப்பு வெளியானது.

இதன்காரணமாக நேற்றுமுன்தினம் மழை விடுமுறையை தொடர்ந்து, வழக்கம்போல் பள்ளிகளுக்குச் சென்ற மாணவ–மாணவிகள் விடுமுறை அறிவிப்பால் ஏமாற்றத்துடன் மழையில் நனைந்தபடி வீடு திரும்பினர்.

<u>மழையளவு</u>

நேற்று முழுவதும் திருவாரூரில் தூரலாகவும், அவ்வப்போது சாரலாகவும் மழை பெய்தது. மாவட்டம் முழுவதும் இதே நிலையே நீடித்தது. நேற்று காலை 8.30 மணிக்கு முடிவடைந்த 24 மணி நேரத்தில் திருவாரூர் மாவட்டம் வலங்கைமானில் அதிகபட்ச மழை பதிவாகி உள்ளது. அங்கு 65 மி.மீ. மழை பெய்தது.

மாவட்த்தின் மற்ற பகுதிகளில் பெய்த மழை அளவு விவரம் மி.மீ. அளவுகளில் வருமாறு:– குடவாசல்:– 62, நன்னிலம்:– 32, திருவாரூர்:– 26, நீடாமங்கலம்:– 19, திருத்துறைப்பூண்டி:– 18, பாண்டவையாறு தலைப்பு:– 17, மன்னார்குடி:– 12, முத்துப்பேட்டை:– 9. நேற்று காலை நிலவரப்படி மாவட்டம் முழுவதும் சராசரியாக 29 மில்லி மீட்டர் மழை பதிவாகியது. மொத்த மழை அளவு 261 மில்லி மீட்டர் ஆகும்.

**கடல் நீரை மேகம் உறிஞ்சும் அரிய 'நீர்த்தாரை' காட்சி கடலூர் மீனவரின் செல்போன் காமிராவில் சிக்கியது**



கடல் நீரை மேகம் உறிஞ்சும் அரிய நீர்த்தாரை காட்சி, கடலூர் மீனவரின் செல்போன் காமிராவில் சிக்கியது.

<u>**நீரை உறிஞ்சிய மேகம்**</u>

கடலூர் சிங்காரத்தோப்பைச் சேர்ந்த மீனவர் மதியழகனும் அவரது தம்பியும் மரக்காணம் அருகே ஆலம்பாறை என்ற இடத்தில் இருந்து கடலுக்குள் 5 கிலோ மீட்டர் தொலைவில் பெரிய விசைப்படகில் தங்கியிருந்து மீன்பிடித்துக்கொண்டு இருந்தனர்.அப்போது காலை சுமார் 8–30 மணி இருக்கும். திடீரென மேகங்கள் வானில் இருந்து தாழ்வாக கடல் அருகே இறங்கியதையும், அப்போது கடல் நீர்

சுழல் போல் மேலெழுந்து மேகங்களுக்குள் இழுக்கப்படும் அதிசய நிகழ்வையும் கண்டனர். சுழலின் மூலம் கடல் நீர் மேகத்துக்கு எடுத்துச்செல்லப்பட்ட நிகழ்வு சுமார் அரை மணிநேரம் நீடித்தது.

## அதிசய காட்சி

இந்த அதிசய நிகழ்வை பார்த்து மெய்சிலிர்த்துப்போன மீனவர் மதியழகன், தனது செல்போன் காமிரா மூலம் அதிசய காட்சியை 'கிளிக்' செய்தார். இன்று கரைக்கு திரும்பி வந்த அவர் அந்த படங்களை 'தினத்தந்தி' நிருபரிடம் கொடுத்தார். இது பற்றி மதியழகன் கூறியதாவது:–

பொதுவாக மழைகாலங்களில் மேகம் கீழிறங்கி கடல் நீரை உறிஞ்சும் காட்சியை பல முறை கண்டிருக்கிறேன். அப்போதெல்லாம் 1 கிலோ மீட்டருக்கு அப்பால் தான் பார்த்திருக்கிறோம். ஆனால் தற்போது மிக அருகில் இக்காட்சியை கண்டோம். எங்கள் படகில் இருந்து 5 நிமிடத்தில் அந்த இடத்துக்கு சென்று விடலாம். அவ்வளவு அருகே இதுவரை நான் இக்காட்சியை கண்டதில்லை.

இவ்வாறு அவர் கூறினார்.

இதுபோன்று நிகழ்வை, யானை தும்பிக்கையை இறக்கி இருக்கிறது. என்று மீனவர்கள் சொல்கிறார்கள். ஆனால் அறிவியலாளர்கள் இதை நீர்த்தாரை என்று சொல்கிறார்கள். இது பற்றி கடலூர் துறைமுக அதிகாரி கேப்டன் அன்பரசன் கூறியதாவது:–

## பலகிலோ மீட்டர் வேகம்

கடலின் மேல் வீசும் காற்று குளிர்ந்த காற்றாகவும், கடலின் காற்று சற்று வெப்பமாகவும் இருந்தால், கடலில் நீர்த்தாரைகள் எனப்படும் அதிசய நிகழ்வு ஏற்படும்.

பொதுவாக பருவநிலை மாற்றம் ஏற்படும் போது இதுபோன்ற நிகழ்வுகள் நடைபெறும். மீண்டும் இரண்டு காற்றுகளின் வெப்பநிலையும் சமமாக மாறும் போது, நீர்த்தாரைகள் மறைந்து விடும். இந்த விநோத நிகழ்வின் போது கடலின் நீர் அதிவேகமாக உறிஞ்சப்பட்டு மேகமாக மாறி விடும். இதன் வேகம் பல கிலோ மீட்டராக இருக்கும்.

இதற்கு ஆங்கிலத்தில் ''டோர்னடோ'' என்று பெயர். இவைகள் ஐரோப்பா போன்ற பகுதிகளில் அதிகம் காணப்படும். இவை அனைத்தும் பருவகாலம் மாறும் போது நடைபெறும் நிகழ்வுகள்.

இவ்வாறு அவர் கூறினார்.

**குமரி மாவட்டத்தில் 11,250 ஏக்கரில் கும்பப்பூ நெல் சாகுபடி மழை ஓய்ந்ததால், பேச்சிப்பாறை அணை இன்று திறப்பா?**



இருபோக சாகுபடி

நாகர்கோவில்,

குமரி மாவட்டத்தில் 11,250 ஏக்கரில் கும்பப்பூ நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மழை 2 நாட்களாக ஓய்ந்திருப்பதால் பேச்சிப்பாறை அணை தண்ணீர் இன்று திறக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

குமரி மாவட்டத்தின் முக்கியத் தொழில்களில் ஒன்றாக விவசாயத் தொழில் இருந்து வருகிறது. விவசாயத்தில் நெல் சாகுபடியை பொறுத்தவரையில் கன்னிப்பூ, கும்பப்பூ என்ற இருபோக சாகுபடி இம்மாவட்டத்தில் நடைபெற்று வருகிறது. அணைகளில் பாசனத்துக்கு தேவையான தண்ணீர் இருக்கும் பட்சத்தில் கன்னிப்பூ சாகுபடி 17,500 ஏக்கரிலும், கும்பப்பூ சாகுபடி 17,500 ஏக்கரிலும் நடைபெறுவது வழக்கம்.

கன்னிப்பூ சாகுபடியின் தொடக்கத்தில் அணைகளில் போதுமான தண்ணீர் இல்லாமல் இருந்தாலும், இடையிடையே பெய்த மழையின் காரணமாக பாசனத்துக்கு தண்ணீர் தட்டுப்பாடின்றி கிடைத்து வந்தது. அறுவடை நேரத்தில் பலத்த மழை பெய்ததின் காரணமாக ஏராளமான ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்டிருந்த நெற்பயிர்கள் மழைத்தண்ணீரில் மூழ்கி சேதத்துக்கு உள்ளாயின.

<u>17,500 ஏக்கருக்கு மேல் சாகுபடியாகும்</u>

இந்தநிலையில் 2–வது போக நெல் சாகுபடியான கும்பப்பூ சாகுபடியில் விவசாயிகள் தீவிரம் காட்டி வருகின்றனர். ஏராளமான விவசாயிகள் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களில் நெல் சாகுபடியை முடித்துள்ளனர். குறிப்பாக ராஜாக்கமங்கலம், அகஸ்தீஸ்வரம், தக்கலை, தோவாளை வட்டாரங்களில் பெரும்பாலான விவசாயிகள் சுமார் 4500 ஹெக்டேரில் அதாவது 11,250 ஏக்கரில் நெல் சாகுபடியை முடித்துள்ளனர் என்றும், அதிலும் குறிப்பாக தோவாளை வட்டாரத்தில் மட்டும் சுமார் 2 ஆயிரம் ஹெக்டேர் அதாவது 5 ஆயிரம் ஏக்கரில் நெல்சாகுபடி செய்யப்பட்டுள்ளதாகவும் வேளாண்மைத்துறை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மேலும் அந்த அதிகாரி கூறும்போது, கடந்த ஆண்டு கும்பப்பூ சாகுபடி 13,750 ஏக்கரில் நடந்ததாகவும், இந்த ஆண்டு குமரி மாவட்டத்தின் கடைமடை பகுதிகள் வரை அனைத்துக் குளங்களிலும் தண்ணீர் இருப்பதாலும், பேச்சிப்பாறை, பெருஞ்சாணி அணைகளில் தண்ணீர் இருப்பதாலும் நெல் சாகுபடி விவசாயிகள் உற்சாகமாகத் தங்களது சாகுபடி தொழிலை தொடங்கியுள்ளனர். எனவே இந்த ஆண்டு 17,500 ஏக்கருக்கும் மேல் நெல் சாகுபடி செய்யப்படும் என்ற நம்பிக்கை உள்ளது. கும்பப்பூ சாகுபடி நேரத்தில் மழை பெய்து கொண்டிருப்பதாலும், பனிக்காலமாக இருப்பதாலும் பயிர்களுக்கு நோய்த்தாக்குதல் அதிகமாக இருக்கும். அதற்காக வட்டாரம் வாரியாக வருகிற ஜனவரி மாதம் வரை நோய்த்தடுப்பு முகாம்கள் வேளாண்மைத்துறை சார்பில் நடத்தப்பட்டு வருகிறது'' என்றார்.

பேச்சிப்பாறை அணை திறப்பா?

அதிக அளவு கும்பப்பூ நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ள நிலையில் கடந்த சில தினங்களாக தொடர்ந்து பெய்து வந்த மழை, 2 நாட்களாக ஓய்ந்து விட்டது. தொடர்ந்து மழை பெய்து கொண்டிருந்ததால் பெருஞ்சாணி அணையில் இருந்து மட்டுமே தினமும் 200 கன அடி வீதம் தண்ணீர் திறந்து விடப்பட்டு வருகிறது. மற்ற அணைகள் அனைத்தும் மூடப்பட்டுள்ளன. மழை ஓய்ந்து விட்டதால் பேச்சிப்பாறை அணையில் இருந்து இன்று (வெள்ளிக்கிழமை) முதல் தண்ணீர் திறந்து விடப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதுதொடர்பாக பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் சுப்பிரமணியத்திடம் கேட்டபோது, "தொடர்ந்து பெய்து வந்த மழையினால் சானல்களில் ஓடிய மழைத்தண்ணீரைக் கொண்டு பாசனத்தேவை பூர்த்தி செய்யப்பட்டு வந்தது. கடந்த 2 நாட்களாக மழை ஓய்ந்து விட்டது. இன்றும் மழை பெய்யவில்லை என்றால் இன்று மாலையில் இருந்து பேச்சிப்பாறை அணையில் இருந்து தண்ணீரை திறந்துவிட முடிவு செய்துள்ளோம். மழை பெய்தால் பேச்சிப்பாறை அணையில் இருந்து தண்ணீர் திறக்க வேண்டிய அவசியம் இருக்காது'' என்றார்.

**நாகை மாவட்டத்தில் காற்றுடன் கூடிய பலத்த மழை அதிகபட்சமாக சீர்காழியில் 85 மி.மீ மழை பதிவானது**



நாகப்பட்டினம்,

நாகை மாவட்டத்தில் காற்றுடன் கூடிய பலத்த மழை பெய்தது. அதிகபட்சமாக சீர்காழியில் 85 மி.மீட்டர் மழை பதிவாகியுள்ளது.

வடகிழக்கு பருவமழை

தமிழகத்தில் தற்போது வடகிழக்கு பருவ மழை காலம் நடைபெற்று வருகிறது. இந்நிலையில் தமிழ்நாட்டிற்கு தென்மேற்கு வங்கக்கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகி தற்போது மேலும் தீவிரமடைந்து காற்றழுத்த தாழ்வு பகுதியாக வலுவடைந்துள்ளது. இந்த காற்றழுத்த தாழ்வு நிலையால் தமிழகத்தில் பல்வேறு இடங்களில் பலத்த மழை முதல் மிதமான மழை பெய்து வருகிறது.இந்நிலையில் நாகை மாவட்டத்தில் 4 நாட்களாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது. நாகை மாவட்டத்தில் நேற்று காற்றுடன் கூடிய பலத்த மழை பெய்தது.

<u>கடல் சீற்றம்</u>

மேலும், நாகையில் நேற்றும் கடல் சீற்றத்துடன் காணப்பட்டதால் பெரும்பாலான மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்கு செல்லவில்லை. எனினும் ஒருசில மீனவர்கள் கடல் சீற்றத்தையும் பொருட்படுத்தாமல் வழக்கம்போல் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்று வருகின்றனர். இவர்கள் பிடித்து வரும் மீன்கள் நாகை மீன் இறங்கு தளத்தில் கொண்டு வரப்படுகிறது. மழையின் காரணமாக இறங்கு தளத்தில் மீன் வாங்குபவர்களின் எண்ணிக்கை குறைவான அளவிலேயே காணப்பட்டது.

**<u>மழை அளவு</u>** நாகை மாவட்டத்தில் நாகை, திருமருகல், திட்டச்சேரி, நாகூர், வேளாங்கண்ணி, கீழ்வேளூர், திருப்பூண்டி, வேதாரண்யம், மயிலாடுதுறை, சீர்காழி, தரங்கம்பாடி, கொள்ளிடம் உள்ளிட்ட அனைத்து பகுதிகளிலும் பலத்தமழை பெய்தது.நாகை மாவட்டத்தில் நேற்று முன்தினம் காலை 8 மணி முதல் நேற்று காலை 8 மணி வரை அதிகபட்சமாக சீர்காழியில் 85 மி.மீட்டர் மழையும், குறைந்த பட்சமாக திருப்பூண்டியில் 7 மி.மீட்டர் மழையும் பதிவாகியுள்ளது. மேலும் மற்ற இடங்களில் பெய்த மழையின் அளவு வருமாறு:– (மில்லி மீட்டரில்)தரங்கம்பாடி – 71, நாகப்பட்டினம் – 60.50, கொள்ளிடம் – 46, வேதாரண்யம் – 41

மயிலாடுதுறை – 39.40, மணல்மேடு – 28.20, தலைஞாயிறு – 9.20. மழை பெய்துள்ளது. இதன் மொத்த மழை அளவு – 387.30 மி.மீட்டர் ஆகும்.